பக்கங்கள்: பதினாறு

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 12 செவ்வாய்க்கிழமை (24-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:90

வடமராட்சி மீனவர்களை வெட்டிக் குதறி தமிழக மீனவர்கள் நேற்று அட்டகாசம்!

இருவர் படுகாயம்; ஒருவரைக் காணவில்லை!!

கரவெட்டி,பெப்.24

வடமராட்சிக் கடலில் நேற்று காலை 10.45மணியளவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் மீது தமிழக மீனவர்கள் நடத்தியதாகக் கூறப்படும் கோரத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். மிக மோசமான வெட்டுக்காயங்களுடன் கடலில் தூக்கிவீசப்பட்டார் எனக் கருதப்படும் மற்றொரு மீனவரைக் காணவில்லை. அவர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இவர்கள் மூவரும் வடமராட்சிக் கடலில் நேற்று மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம், குல்லா வள்ளத்தில் அப்பகுதிக்கு வந்த சுமார் 25 தமிழக மீனவர்களே இந்த அட்டகாசத்தைப் புரிந்தனர் என்று கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் இன்பருட்டியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசா (வயது40), அவரது மகன் செல்வராஜா செல்வமோகன் (வயது16) ஆகிய இருவரும் தலை, கை, கால்கள் எங்கும் பலத்த வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். மோசமாக வெட்டப்பட்ட நிலையில் கடலில் தூக்கி எறியப்பட்ட இன்பருட்டியைச்சேர்ந்த இரத்தினம் சிவானந்தன் (வயது 38) என்ற மீனவரே காணாமற்போயிருக்கின்றார்.

இந்திய மீனவர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த செ.செல்வராசா இச்சம்பவம் குறித்துக் கூறியதாவது:-

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இந்தியமீனவர்கள் திடீரென்று வந்து வாள், கொடுவாள், கொட்டன் போன்றவற்றால் எம்மைவெட்டியும் அடித்தும் தாக்கத் தொடங்கினர். நாம் எவ்

(16ஆம் பக்கம் பார்க்க)

செயலகத்தின் முன் மக்கள் கூட்டம்; உணர்ச்சிப் பிரவாகம்

நில உரிமைக் கோஷம் முழங்க யாழில் கூட்டமைப்பு வேட்பு மனுக்கள் தாக்கல்!

பலத்த பொலீஸ் இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் ஆனந்தசங்கரியும் நேரகாலத்தோடு தனது சுயேச்சைக் குழுவின் மனுக்களைச் சமர்ப்பித்தார்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி24

ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு நின்று கரகோஷம் செய்தும் நில உரிமைக் கோஷத்தை ஓங்கி ஒலித்தும் உணர்ச்சி பூர்வமாகத் தமது ஆதரவைத் தெரிவிக்க யாழ். மாவட்டத்துக்கான வேட்புமனுக்களைத் தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் தாக்கல் செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியும் பலத்த பொலீஸ் இராணுவப் பாதுகாப்புடன் முன்கூட்டியே காலை 9.45 மணியளவில் செயலகத்துக்குச் சென்று தனது தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்தார்.

கூட்டமைப்பு ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர்.

தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள், முன்னாள் எம்.பி.மாவை சேனாதிராஜாவைத் தலைமைவேட்பாளராகக் கொண்டு தமிழரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

மாவை சேனாதிராஜாவும் மற்றும் வேட்பாளர்களும் மஞ்சள், சிவப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட வாகனங்களில் அணியாக வந்து சேர்ந்தனர். மக்கள் கைகளைத் தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றனர். 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்று வான்முட்டக் கோஷம் எழுப்பினர். மாவைசேனாதிராஜா, என.ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் செயலகத்தினுள் சென்று வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்தனர்.

தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு முன்னர் 10.30 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று மாவீர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அங்கே புலிகள் இயக்கத்தின் யாழ்.மாவட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமைப்பு வேட்பாளர்களில் சிலர்...

ஆறு கட்சிகள்; ஒரு சுயேச்சைக் குழு யாழ். மாவட்டத்தில் மனுக்கள்தாக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.24

எதிர்வரும் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட ஒரு சுயேச்சைக்குழுவும் ஆறு அரசியல்கட்சிகளும் இதுவரை வேட்புமனுக்களைத தாக்கல் செய்துள்ளன.

தமிழ்க்கூட்டமைப்பு, மாவை சேனாதிராஜாவை முதன்மை வேட்பாளராகவும்.

ஐக்கிய சோசலிசக்கட்சி, சுப்பிரமணியம் நகுலராஜாவை முதன்மை வேட்பாளராகவும்.

புதிய ஜனநாயகக்கட்சி, அகுமாரசாமியை முதன்மைவேட்பாளராகவும்.

சுயராஜ்யக் கட்சி, இகுலசேரவை முதன்மை வேட்பாளராகவும் கொண்டு வேட்புமனுத்தாக்கல் செய்தன.

வீ.ஆனந்தசங்கரி தலைமையில் சுயேச்சைக் குழு ஒன்றும் மனுத் தாக்கல் செய்தது.

ஈ.பி.டி.பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் சுயேச்சைக்குழு ஒன்றும் இன்று வேட்புமனுத்தாக்கல் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இன்று நண்பகல் 12 மணிவரை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நேற்று வேட்புமனுத்தாக்கல் செய்த குழுக்களில் போட்டியிடுவோர் விவ

(16ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமைப்புக்கு ஆதரவாக மகேஸ்வரன் இங்கு பிரசாரம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடி முன்னாள் இந்துகலாசார அமைசர் தி.மகேஸ்வரன் பிரசாரம் மேற்கொள்ளவிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. முன்னணி சார்பில் எதிர்வரும் தேர்தலில் மகேஸ்வரன் போட்டியிட உள்ளார்.

இதேவேளை, தமிழ்மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கத்துடன் அவர் யாழ்.மாவட்டத்தில் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரம்செய்ய முடிவுசெய்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது

வாக்களிப்புத் தினத்துக்கு சில நாள்கள் முன்னதாக அவர் குடாநாட்டில் தமிழர் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யத்திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஒ-3)

தமிழர் கூட்டமைப்பின் யாழ்.தேசியப் பட்டியல்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் இடம் பெறுவோரின் முழுவிவரங்கள் வருமாறு.

மா.க.கனகேந்திரன் (ஈழவேந்தன்) - (முதன்மைவேட்பாளர், கொழும்புத் துறை), கந்தவனம் சூரியகுமார் - (செயலாளர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம்), அப்பாத்துரை குமாரவேல் (வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அமைய இயக்குநர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), ரசீன் முகமெட் இமாம் (சட்டத்தரணி), தம்பிஜயா மகாசிவம் (செயலாளர், தமிழர் ஆசிரியர் சங்கம்), நா.கணேசன் - (தலைவர் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்), பரராசசிங்கம் கனகலிங்கம் (தலைவர், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமா

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நூலகத்தில் 23 வருடங்களின் பின்னர் சேவை

யாழ்ப்பாணம்.பெப்.24

யாழ். பொது நூலகத்தில் 23 வருடங்களின் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நேற்றுமுதல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நூலகத்தை முற்றாகப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கு மேலும் சிலமாதங்கள் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(விரிவான செய்தி மற்றும் படங்கள் 5ஆம் பக்கத்தில்)

வாளால் அறுக்க முயன்றபோது ஷெல் வெடித்ததில் ஒருவர் பலி!

கொழும்புத்துறையில் சம்பவம்

கொழும்புத்துறை,பெப்.24

வெடிக்காத 'ஷெல்' ஒன்றை வாள் 'பிளேடால்' அறுக்கமுயன்றவர், அது வெடித்ததில் உயிரிழந்தார்; அருகில் நின்ற இருவர் படுகாயமடைந்தனர்.

கொழும்புத்துறை, நெடுங்குளம் பிள்ளையார் கோவில் பகுதியில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. கொழும்புத்துறையைச் சேர்ந்த இரண்டுபிள்ளைகளின் தந்தையான வெற்றிவேலு நாதன் (வயது 34) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். குருநகர் சென்பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்தவரான மரியதாஸ் அன்ரன் பிரசன்னா (வயது 21), மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்தவரான அந்தோனிப்பிள்ளை ஜேசுரட்ணம் (வயது24) ஆகிய இருவரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

மூன்றுவிடயங்களை இந்தத் தேர்தல்மூலம் தமிழர்கள் உலகுக்கு உணர்த்த வேண்டும்!

கூட்டமைப்பு வேட்பாளர் மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

★ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என முன்னர் தமிழ்மக்கள் வழங்கிய ஆணை உறுதியானது, சந்தேகத்துக்கு இடமற்றது என்று சர்வதேசத்திற்கும் சிங்களதேசத்துக்கும் மீண்டும் வலியுறுத்தல்.

★ விடுதலைப் போராட்டம் முடிவடையாத நிலையில், ஜனநாயகம் என்ற பெயரில் திசைதிருப்பும் கருத்துக்களுக்கு தமிழ்மக்கள் மத்தியில் இடமளிக்கக்கூடாது என்று வலியுறுத்தல்.

★ சுயநிர்ணய ஆட்சிமுறை நோக்கிய விடுதலைப் புலிகளின் சிந்தனைக்கு அங்கீகாரம் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தல்.

மேற்கண்ட மூன்று அம்சங்களை முன்வைத்து அவற்றுக்கு ஆணை வழங்க இத்தேர்தலைத் தமிழ்மக்கள் பயன்படுத்த வேண்டும்

இப்படிக்கூறினார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா.

தமிழ்க் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் கூட்டப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த தமிழ்மக்களும் விடுதலைப் புலிகளும் தயாராக இருக்கின்றார்கள் என்ற செய்தியை இத்தேர்தல் மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் விடுக்கவிருக்கின்றோம்.

கடந்தகாலங்களில் ஜனநாயக வழியில் செயற்பட்ட கட்சிகளும், ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு இன்று ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள கட்சிகளும், குடாநாட்டில் மக்கள் உரிமைக்காகப் போராடும் பொது அமைப்புக்களும் இணைந்ததாகக் கூட்டமைப்பு தேர்தலைச் சந்திக்கின்றது.

தமிழ்மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையிலான இத்தேர்தலில் தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஓரணியில் செயற்படவேண்டும். இந்த வகையில் மக்கள் முழுப் பங்களிப்பையும் வழங்கவேண்டும்.

தமிழ்மக்களின் எதிர்கால வாழ்வு தொடர்பாக மூன்று முக்கிய அம்சங்களை முன்வைத்து கொள்கை அறிக்கை ஒன்றைத் தயாரிக்கப்போகின்றோம்.

கிளிநொச்சியில் நாளை புதன் கிழமை கூட்டமைப்புத் தலைவர்களும விடுதலைப் புலிகளும் இணைந்து இக் கொள்கை அறிக்கையைத் தயாரித்து வெளியிடுவோம். வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் சகலரும் இணைந்து செயற்பட நாம் முன்வந்துள்ளோம் - என்றார்.

மற்றொரு வேட்பாளரான ஜி.ஜி. கஜேந்திரகுமார் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைக்க சில சக்திகள் முன்வந்துள்ளன. தெற்கில் உள்ள சில பேரினவாதச்சக்திகளும் இதன் பின்னணியில் இருக்கின்றன. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என்று காட்டுவதற்கு அச்சக்திகள் முனைந்து நிற்கின்றன. இந்தச்சக்திகளை முறியடிக்க மக்கள் தயாராகவேண்டும் - என்றார்.

வேட்பாளரான திருமதி பத்மினி சிதம்பரநாதன் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் எமது மக்களின் அபிலாஷைகளை முன்நிறுத்தி 'பொங்குதமிழ்' நிகழ்வுகளை நடத்தினோம். மற்றுமொரு 'பொங்குதமிழ்' நிகழ்வாகவே தேர்தலைப் பார்க்க வேண்டும். நாம் முன்வைத்த கோரிக்கைகளையே இத்தேர்தலில் முன்வைக்கிறோம் என்றார் அவர்.

வேட்பாளர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், எஸ். கஜேந்திரன் ஆகியோரும் உரையாற்றினர். (ஒ-3-86)

சாவகச்சேரி அஞ்சலகம் நேற்று புதிய கட்டடத்தில் ஆரம்பம்

சாவகச்சேரி,பெப்.24

புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி பிரதம தபால் நிலையக் கட்டடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் அஞ்சலகப் பணிகள் ஆரம்பமாகின. இதனையொட்டி ஆரம்ப நிகழ்வு சிறிய அளவில் நடத்தப்பட்டது.

தபால் நிலையக் கட்டடத்தை சாவகச்சேரி தபால் நிலைய அத்தியட்சகர் கே.பாலரத்தினம் திறந்துவைத்தார்.

இத் தபால் நிலையக் கட்டடத்தை ஞாயிற்றுக்கிழமை அஞ்சல்மா அதிபர் நேரடியாகப் பார்வையிட்டபின் அதனை உடனடியாகப் பொதுமக்களுக்குப் பயன்படுத்தும் வகையில் திறந்துவைக்குமாறு பணித்தார் என்று கூறப்படுகிறது.

நேற்றைய தினம் புதிய கட்டடத்தில் தபாலகக் கருமங்கள் இடம்பெற்றன. முதற்பணியாக வயது முதிர்ந்த பொதுமக்களுக்கான மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டது.

இந்தத் தபால்நிலையக் கட்டடப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகியும் நீண்டகாலமாகத் திறக்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-31)

இசைவிழாவில் இன்று

யாழ்ப்பாணம்.பெப்.24

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் நான்காம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

மாலை 4.00 மணிக்கு எம்.சிவசுப்பிரமணியம், எஸ்.செல்வக்குமார், என்.ராஜேஸ்வரன், ஆர்.தர்சன் குழுவினரின் மங்கள இசையும், 5.30 மணிக்கு டக்ஷா பிரிந்தாபன், அபயன் சிவநாதன், காஞ்சனா, ஹரிகரசர்மா, சங்கீதா பரமகுருசாமி ஆகியோரின் வீணை இசை தொடர்ந்து ஸ்ரீதேவி கண்ணதாசனின் புஸ்பாஞ்சலி இடம்பெறும்.

6.15மணிக்கு வி.பரமசாமியின் பாட்டு 6.30மணிக்கு ஆரணி ஷெயப் பிரேமலோசனின் தனிநடனம், 6.45 மணிக்கு அ.ஜெயராமனின் வயலின் இசை, இரவு 7.30மணிக்கு சுகன்யா சிவநாதனின் இசைக்கச்சேரியும் 8.30 மணிக்கு திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் மாணவிகளது நாட்டியாஞ்சலி நடைபெறும். (எ-10)

ஐந்து கட்சிகள் வவுனியாவில் நேற்று வேட்புமனுக்கள் தாக்கல்

வவுனியா,பெப்.24

பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழரசுக்கட்சி உட்பட ஐந்து கட்சிகள் நேற்று வவுனியா செயலகத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன. ஐக்கிய தேசிய முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய மக்கள் முன்னணி என்பன வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த ஏனைய கட்சிகளாகும்.

தமிழரசுக்கட்சியின் வேட்புமனு பிற்பகல் 12.30 மணியளவில் தாக்கல் செய்யப்பட்டது. புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படத்துக்கும் தேசியக் கொடிக்கும் முன்னால் அகவணக்கம் செலுத்திய வேட்பாளர்கள் வவுனியா செயலகத்துக்கு ஊர்வலமாக வந்து வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

அ.அடைக்கலநாதனை முதன்மை வேட்பாளராகக் கொண்ட வேட்புமனுப் பட்டியலில் ஏனைய வேட்பாளர்கள் வருமாறு:-

அண்ணாமலை நடேசு சிவசக்தி, சிவநாதன் கிஷோர், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஜோன் பெனடிக் கிரிஸ்தோபர், சமியு நூர் மொகம்மட் அப்துல் சமியு, சதாசிவம் கனகரட்ணம், அகஷ்டி யோசப் மரியநாயகம், சு.வினோநோதராதலிங்கம்.

தமிழ்மக்கள் தமது ஒற்றுமையை இந்தத் தேர்தலில் சர்வதேச சமூகத்திற்கு ஒருமித்து வெளிப்படுத்த உள்ளனர் என்று கூறிய அ.அடைக்கலநாதன் தமிழர்கள் அனைரும் ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ந்து இருக்கின்றனர் எனவும் இதன் பலாபலன் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி தெரியும் எனவும் கூறினார்.

சகல பொலீஸ் இடமாற்றங்களும் தேர்தல் முடியும்வரை இடைநிறுத்தம்

தேசியப் பொலீஸ் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு,பெப்.24

பொதுத்தேர்தல் முடியும்வரை சகல பொலீஸ் இடமாற்றங்களையும் இடைநிறுத்துவதென தேசியப் பொலீஸ் ஆணைக்குழு தீர்மானித்திருக்கின்றது.

இந்த நேரத்தில் பொலீஸ் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுமேயானால் பொதுத்தேர்தலில் அது தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதனாலேயே இடமாற்றங்களை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது என்று ஆணைக்குழுவின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்ஜித் அபேசூரிய தெரிவித்திருக்கிறார்.

இடமாற்றங்களை இடைநிறுத்தும் தீர்மானம், பதவி உயர்வு பெறும் பொலீஸ் அதிகாரிகளுக்கும் ஏற்புடையது என்பதால் அந்த அதிகாரிகளும் தேர்தல் முடியும்வரை இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள் எனவும் அவர் கூறுகிறார்.

தேர்தல் நடைபெறும் காலத்தில் பொலீஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கவும் சிலரை இடமாற்றம் செய்யவும் ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் எனத் தகவல் கிடைத்திருப்பதால் அவற்றை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஐக்கிய தேசிய முன்னணி பொலீஸ் ஆணைக் குழுவைக் கோரியிருந்தது.

திருமலையில் 6 அரசியல் கட்சிகள் 4 சுயேச்சைக்குழுக்கள் மனுத்தாக்கல்

திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஆறு அரசியல் கட்சிகளும் நான்கு சுயேச்சைக் குழுக்களும் நேற்று தங்கள் வேட்புமனுக்களைத் சமர்ப்பித்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி: இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம், ச.கௌரி முகுந்தன், தா.சண்முகநாதன், கேரகுநாதன், டபிள்யூ. விக்கினேஸ்வரன், அப்துல் ஹஸன் சாகுல் ஹமீட்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி: கே.விக்னேஸ்வரன், ரீ.புஷ்பராசா, ஏரமணி, ஜீபுலோகராஜன், வீ.சித்திரவேலு, சேவியல் கதிரின், ஏ.ஜே.ஏப்ரஹாம்.

ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி: எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன, எம்.டபிள்யூ. எம்.ஜயந்த விஜேசேவ, நிமால் காமினி ஹேவா விதாரண, ஜே.கிருபைராஜா, டி.எச்.விமலசிறி, ஏ.ஆர்.இத்ரிஸ், எம்.எம்.மொஹிதீன்.

சிங்கள மகஜன சம்பத பூமிபுத்திர கட்சி: காமினி கலகொட, ஆர்.ஏ. ஸ்ரான்லி, ஆர்.ஏ.டி.இராமநாயக்க, பி.ஜி. என்.ரட்னநாயக்க, டபிள்யூ.ஏ.பியசேன, பீ.சூரியராச்சி, எம்.டீ.ஜெராட் வீரக்கோன்.

ஐக்கிய முஸ்லிம் கட்சி: ஏ.ஜான் தெமர்ஜான், ஏ.எல்.வசமித், எம்.பீ. மர்சூக், அப்துல் காதர் மொகமட் யூசுப், அப்துல் காதர் மொகமட் பாலிம், முகமட் அனி முகமட் முதீஸ், மொஹிதீன் பாவா மர்சூக்,

புதிய இடதுசாரி முன்னணி: நடராஜா ஆனந்தராஜா, ஏ.எச்.ஹாசைன், ஏ.ஆர்.மஜார்தீன், எம்.ஏ.பேமிஸ், கே.டபிள்யூ.ஜயராம் தயாளன், எம்படுகநாதன், ஏ.அருண புஷ்பகுமார்.

எம்.கே.எல்.லாபிர் தலைமையில் ஒரு சுயேச்சைக் குழுவும், எச்.ஆர்.எம். பைசால் தலைமையில் மற்றொரு சுயேச்சைக்குழுவும், எம்.எல்.அப்துல் ரஹீம் தலைமையில் ஒரு சுயேச்சைக் குழுவும், எம்.எம்.அபயரட்ண தலைமையில் ஒரு சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

சுதந்திரக் கூட்டமைப்புப் பிரசாரத்துக்கு ஆஸ்திரேலியாவின் ஊடக நிபுணர்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரப் பணிக்காக ஆஸ்திரேலியரான ஊடக நிபுணர் மார்க் ஹில்சொப் என்பவரின் சேவையைப் பெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செய்திப் பிரிவில் அவர் ஓர் ஆலோசகராகப் பணியாற்றியிருக்கிறார் என்று கூட்டமைப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் இலங்கைக்கு வந்ததும் பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகமவுடன் இணைந்து ஜனாதிபதியின் ஊடகப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊடகப் பிரசார நடவடிக்கைகளை இணைப்பதற்கு ஜனாதிபதி ஆலோசகர் தாரா டி.மெல் நியமிக்கப்பட்டிருக்கிறார் எனவும் அறியப்படுகிறது.

மேலும் பதினொரு தேர்தல் வன்முறைகள்

கொழும்பு,பெப்.24

நேற்றுக் காலையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 11 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து பொலீஸ் தலைமையக தேர்தல் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, நீர்கொழும்பு ஆகிய பகுதியிலிருந்து தலா 2 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும், பதுளை, சிலாபம், குருநாகல், காலி, கேகாலை, மாத்தறை, நுகேகொடை ஆகிய பகுதிகளில் தலா ஒரு வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகத் தேர்தல செயலகம் தெரிவித்துள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன தலா மூன்று முறைப்பாடுகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 2 முறைப்பாடுகளையும் மக்கள் விடுதலை முன்னணி ஒரு முறைப்பாட்டையும் செய்துள்ளன என்றும் பொலீஸ் தேர்தல் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளத்தில் இரு பிரதான கட்சிகளிலும் நான்கு சிறுபான்மையினர் போட்டி

புத்தளம் மாவட்டத்திற்கான தேர்தல் வேட்பு மனுக்கள் நேற்று புத்தளம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எச்.எம்.ஹேரத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இரு பிரதான அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் வேட்பு மனுக்களை கையளித்தன.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் முதன்மை வேட்பாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.லலித் நியூமல் பெரேரா மனுவைக் கையளித்தார்.

இப்பட்டியலில் சிறுபான்மை இனதின் ஒரேயொரு வேட்பாளராக முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் இடம்பெற்றிருக்கிறார். ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி சார்பாக அதன் முதன்மை வேட்பாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மில்ரோய் எஸ்.பெர்னாண்டோ மனுவைத் தாக்கல் செய்தார். இப்பட்டியலில் சிறுபான்மை இன வேட்பாளர்களாக முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எச்.நவவி, சட்டத்தரணி ஏ.எம்.கமறுதீன் மற்றும் சின்னத் தம்பி முல்லைநாதன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி, ஐக்கிய மக்கள் முன்னணி, சிங்கள மகா சம்பத பூமிபுத்திர, றுகுணுமக்கள் கட்சி என்பனவும் இரு சுயேச்சைக் குழுக்களும் மனுக்கள் தாக்கல் செய்துள்ளன.

அம்பாறை தமிழரசுக்கட்சி வேட்புமனு ஒரேயொரு மாற்றத்துடன் தாக்கல்

காரைதீவு,பெப்.24

தமிழரசுக்கட்சி அம்பாறை மாவட்ட வேட்பாளர் பட்டியலில் ஒரேயொருமாற்றம் செய்யப்பட்டள்ளது. கல்முனை பி.இராசநாயகம் என்பவருக்குப் பதிலாக காரைதீவைச் சேர்ந்த அ.ஸ்ரீஸ் கந்தராஜா என்பவர் இடம் பெற்றுள்ளார். இவர் ரெலோ அமைப்பின் நிர்வாகச் செயலாளரும் கடந்த நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமாவார்.

கட்சியின் வேட்புமனு நேற்று அம்பாறைக் கச்சேரியில் தலைமை வேட்பாளர் அ.சந்திரநேருவால் தாக்கல் செய்யப்பட்டது. ஏனையவேட்பாளர்கள் வருமாறு.:-

க.பத்மநாதன், சா.விவேகானந்தன், அ.ஸ்ரீஸ்கந்தராஜா, சீ.சுந்தரலிங்கம், ச.தினகரம்பிள்ளை, தோமஸ் வில்வியம், ச.யோகாம்பிகை, வேகல்யாண சுந்தரம், இ.சிவகுமார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் நேற்று வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஐதேகவின் பட்டியலில் துரையப்பா முத்துகிருஷ்ணன் என்ற தமிழர் ஒருவரும் இடம்பெறுகின்றார். முஸ்லிம்கள் எவரும் அந்தப் பட்டியலில் இல்லை. ஐதேகவுக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையேயான உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஐ.தே.க. பட்டியலில் முஸ்லிம்கள் இடம்பெறவில்லை என்று கூறப்படுகிறது.

பூமிபுத்திர கட்சி, ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு ஆகியனவும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (ஒ-14)

அப்பாவிப் பொதுமக்கள் 192 பேர் சுட்டு, வெட்டி, எரித்துக் கொலை!

உகண்டாவில் தீவிரவாதிகள் வெறியாட்டம்

லண்டன், பெப்ரவரி24

வடக்கு உகண்டாவில் தீவிரவாத அமைப்பு ஒன்று அகதிகள் தஞ்சம்புகுந்திருந்த இடம் ஒன்றுக்குள் கடந்த சனியன்று புகுந்து நடத்திய வெறியாட்டத்தில் 192 பேர் படுகொலையுண்டனர். எரிகாயங்களுக்கும், சூட்டுக் காயங்களுக்கும், வெட்டுக் காயங்களுக்கும் உள்ளான 56 பேர் அடுத்தநாள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.



உகண்டாவில் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டவர்களின் வீடுகள் எரிந்து கருகிய நிலையில் காணப்படுவதை முதலாவது படத்திலும் அகதி முகாமில் உள்ள அகதிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

அரசப் படைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் ஐயாயிரம் அப்பாவிப் பொதுமக்கள், குடிசைகள் அமைத்துத் தங்கியிருந்த முகாம் பகுதி ஒன்றின் மீதே இக்கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

லீரா நகரிலிருந்து 26 கிலோ மீற்றர்(16 மைல்) தொலைவில் இந்த முகாம் அமைந்துள்ளது.

ஜோசப் கோனி என்பவர் தலைமையில் இயங்கும் எல்.ஆர்.ஏ. என்ற அமைப்பே இந்த வெறியாட்டத்தை நடத்தியிருக்கிறது.

துப்பாக்கிகள், பீரங்கிகள், 'றொக்கட் லோஞ்சர்கள்' போன்றவை சகிதம் திடீரெனத் தீவிரவாதிகள் இந்த முகாம் மீது பாய்ந்தனர் என்றும் - அங்கு தங்கியிருந்த முகாம் உறுப்பினர்களால் தீவிரவாதிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல்போய், அவர்கள் மடிய, தீவிரவாதிகள் முகாமின் ஒரு பகுதியைத் தாக்கி அழித்தனர் என்றும் - கூறப்படுகிறது. தவிரவாதிகளிடமிருந்து தப்புவதற்காகத் தமது குடிசை வீடுகளுக்குள் போய் ஒளிந்தவர்கள் குடிசையோடு சேர்ந்து தீவைத்து எரித்துக் கொல்லப்பட்டனர்.

"லீரா மாவட்ட பொலீஸ் தளபதியோடு அடுத்தநாள் (ஞாயிற்றுக்கிழமை) அங்கு சென்றோம். மொத்தம் 192 சடலங்களை எண்ணினோம். எனது வாழ்வில் மறக்கமுடியாத மிகப் பயங்கரக் காட்சியை அங்கு கண்டேன்" - என்றார் சட்டமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் அஞ்சிரோ.

துப்பாக்கிச்சூடு, கத்திவெட்டு, தீப்புண் போன்றவற்றினால் ஏற்பட்ட படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 56 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அருகில் உள்ள சூடானில் நிலைகொண்டு இயங்கும் தீவிரவாதிகள் குழு, உகண்டாவில் மேற்கொண்டு வரும் இத்தகைய மோசமான தாக்குதல்கள் காரணமாக இதுவரை பத்து லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அமெ. அதிபர் தேர்தலில் 3ஆவது வேட்பாளர்

கடந்த தடவை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ். டபிள்யூ புஷ்ஷுக்கு அரும்பொட்டில் வெற்றி வாய்ப்பைத் தேடித்தந்த மூன்றாவது வேட்பாளர், தாம் இந்தத் தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றார் என அறிவித்திருக்கின்றார்.

இதனால், மீண்டும் புஷ்ஷுக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்திருக்கின்றது எனக் கூறப்படுகின்றது. 1996 இலும், 2000ஆம் ஆண்டிலும் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பச்சைக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர் ரல்ப் நடர்.

அத்தேர்தலில் ஏறத்தாழ சம அளவான பிரதிநித்துவ வாக்குகளை புஷ்ஷும் அல்கோரும் பெற்றதனால் யார் வெற்றியீட்டினர்கள் என்று முடிவு செய்யமுடியாத இழுபறி எற்பட்டது. அப்போது புளோரிடா மாநில வாக்குகளே முடிவைத் தீர்மானித்தன. அங்கு அல்கோரின் வாக்குகளை நடர் பிரித்ததால் புஷ் அதிக வாக்குகளை பெற முடிந்தது. இதேநிலை, இம்முறையும் ஏற்பட்டால் புஷ்ஷுக்கு வெற்றி வாய்ப்பு கிட்டும் என்று கூறப்படுகிறது.

தடை செய்யப்பட்ட செயல்களின் பட்டியலை சீன அரசு வெளியிட்டது

கம்யூனிஸ்ட் கட்சியின் செய்யக் கூடாத தடைசெய்யப்பட்ட செயல்களின் பட்டியலை சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் அரசு வெளியிட்டுள்ளது.

கட்சிப் பதவியைத் தவறாக உபயோகிப்பதையும், குற்றங்கள் நடப்பதைத் தடுக்கவும் இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து கட்சியிலிருந்து பலர் வெளியேற்றப்படும் நிலை ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது.

மொத்தம் 178 செயல்கள் தடை செய்யப்பட்டவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

வரம்புமீறிய நிலையில் தண்டனைக்கு உள்ளாகும் குற்றங்களாக விலைமாதரிடம் செல்வது, பல பெண்களை மணப்பது, சூதாட்டம், போதைப் பழக்கம், மதம் சார்ந்த குழுவில் இணைவது போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன.

ஹெயிட்டியில் மற்றொரு பெரிய நகரமும் கிளர்ச்சியாளர்களின் கையில் வீழ்ந்தது!

இப்போது நாட்டின் அரைவாசிப் பகுதி அவர்களின் வசம்!

போர்ட்ஒப்-பிரின்ஸ்,பெப்.24

ஹெயிட்டியில் ஜனாதிபதி ஜோன் பேட்ரண்ட அரிஸ்டிட்டுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்துவரும் குழுவினரின் வசம் மற்றொரு பெரிய - வடபகுதி - நகரான கேப் ஹெய்ஸியனும் நேற்றுமுன்தினம் வீழ்ந்தது.

இதையடுத்து நாட்டின் அரைவாசிப் பகுதியைக் கிளர்ச்சிவாதிகள் முழுமையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

நாட்டின் வடபகுதியைக் கிளர்ச்சியாளர்களிடம் இழந்துள்ள அரிஸ்டிட்டின் அரசு, தலைநகர் போர்ட் - ஒவ் - பிரின்ஸைன் கோட்டைவிடுவது தவிர்க்க முடியாததாகலாம் எனத் தலைநகரில் உள்ள வெளிநாட்டு செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

ஐந்து லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட கேப் ஹெய்ஸியனின் விமான நிலையமும் கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. ஜனாதிபதி அரிஸ்டிட்டின் நிர்வாகக் குறியீடாக இந்த நகரிலிருந்த, நான்கு பொலீஸ் நிலையங்களையும் பெரிய எதிர்ப்பு ஏதுமின்றிக் கைப்பற்றிய கிளர்ச்சிவாதிகள், அங்கிருந்த பொலீஸாரைக் கலைத்துவிட்டு பொலீஸ் நிலையங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். சிறைவைக்கப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கான கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

அங்கு வீதிகளில் இளைஞர்கள் ஆயுதங்களுடன் திரிந்து மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களிலும் ஆரவாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரச அலுவலகங்கள், அரச வாகனங்கள் சூறையாடப்படுகின்றன.

பொலீஸாரின் தொப்பிகளையும் கவச உடைகளையும் அணிந்துகொண்டு இளைஞர்கள் வீதிகளில் குடித்துக் கும்மாளமிட்டு அட்டகாசம் புரிகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

'அரிஸ்டிட் வீழ்க!' என்ற கோஷத்துடன் வெற்றி ஊர்வலங்களும் ஆங்காங்கே நடக்கின்றன.

தாம் கைப்பற்றிய பிரதேசத்தைத் தனச் சுதந்திர நாடாக அறிவித்துள்ள கிளர்ச்சிப் படைகளின் தளபதி ஜோன் பப்டிஸ் ஜோசப், "இந்த இராணுவம் தான் இந்த நகருக்குப் பொறுப்பு. இந்த இராணுவமே ஹெயிட்டியை முழுமையாக விடுவிக்கும்" - எனச் சூளுரைத்தார்.

முன்னதாக, வட பகுதியின் முக்கிய நகரான கொவாயிஸை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்தனர். இதுவரை மொத்தம் பன்னிரண்டு நகரப் பரப்புகள் அவர்கள் வசம் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக் தற்கொலைத் தாக்குதலில் பத்துப் பேர் பலி; 50 பேர் காயம்!!

பக்தாத்,பெப்.24

ஈராக்கின் கிர்குக் நகரில் பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 50 பேர் காயமடைந்தனர்.

கார் ஒன்றில் வந்த தற்கொலையாளியே தாக்குதலை நடத்தினார் என்று கூறப்படுகின்றது. இந்த ஆண்டு ஆரம்பித்த பின்னர் ஈராக்கிய பாதுகாப்பு படையினரை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் நான்காவது தாக்குதல் இதுவாகும்.

தற்கொலைத் தாக்குதல் நடந்த சிறிது நேரத்தில், அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கில் வந்திறங்கினார்.

நேற்று நடந்த தற்கொலைத் தாக்குதல் சந்தேகத்துக்கு இடமின்றி ஈராக்கியப் பொலீஸாரை இலக்கு வைத்து நடத்தப்பட்டது என்பது தெளிவு எனறு அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளுடன் இணைந்து பணியாற்றுவதால் தீவிரவாதிகளின் இலக்குகளாக அவர்கள் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சதாம் ஹுசைனின் ஆட்சி ஈராக்கில் அகற்றப்பட்ட பின்னர், அமெரிக்க ஆதரவில் அமைக்கப்பட்ட ஈராக்கியப் பொலீஸ் படையைச் சேர்ந்த 300இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். (ம)

பின்லேடன் சிக்குவார்?

அல்கெய்டா தீவிரவாத இயக்கத் தலைவர் பின்லேடன் இருக்கும் இடம்தெரிந்தது. அவரை முற்றுகையிடுவதற்காக அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் விரைந்தன என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றது.

இது தொடர்பாக லண்டன் சண்டே எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாகிஸ்தானில் உள்ள மலைப் பகுதியில் ரகசியமான இடத்தில் பின்லேடன் பதுங்கியிருப்பது தெரிய வந்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்து 16 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பாகிஸ்தான் மலைப் பகுதியில் பின்லேடன் ஒளிந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. பின்லேடனுக்கு விசுவாசம் உள்ள 50 பேர் மட்டுமே பாதுகாவலர்களாக உள்ளனர். இவர்கள் பின்லேடனுக்காக உயிர்த்தியாகம் செய்யவும் தயாராக இருக்கின்றார்கள்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியிலுள்ள தொடாகாகர் மலையில் ஒளிந்திருக்கும் பின்லேடனைப் பிடிக்க பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் படைகள் தங்களின் தலைமைகளின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

பின்லேடனும், தலிபான் தலைவர் முல்லா முஹமது ஓமரும் சேர்ந்து இருக்கின்றனர் எனவும், அவர்கள் உறுதியாகப் பிடிபட்டு விடுவார்கள் என்றும் அமெரிக்க இராணுவத் தளபதிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

அதேசமயத்தில், பின்லேடன் விரைவில் பிடிபட்டால் வருகின்ற நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அது சாதகமாக அமையலாம் என்று கருதப்படுகின்றது.

'சோயுஸ்' விண்வெளி ஓடத்துக்கு பதிலாக ரஷ்யாவின் புதிய கலம்

மொஸ்கோ.பெப்.24

'சோயுஸ்' விண்வெளி ஓடத்திற்குப் பதிலாக 'கிலிப்பர்' என்ற புதிய விண்வெளி ஓடத்தை ரஷ்யா தயாரிக்கிறது. இதை 2010ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா தற்போது சோயுஸ் என்ற விண்வெளி ஓடத்தைப் பயன்படுத்தி வருகின்றது. சமீபத்தில் விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்வெளி ஓடம், திரும்பியும் வந்துவிட்டது. அதனுடைய பயணம் இன்னும் பலமுறை தொடரும். இருந்தாலும், சோயுஸுக்கு மாறாக, புதிய விண்வெளி ஓடத்தை தயாரிக்கும் பணியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது. இது சோயுஸுக்கு மாறாக 2010ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

'கிலிப்பர்' விண்வெளி ஓடத்தில் பல நவீன வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. ஆறு விண்வெளி வீரர்களைச் சுமந்துசெல்லும் வகையில்- விபத்து ஏற்படும் பட்சத்தில் - விண்வெளி வீரர்கள் தப்பிக்கும் வகையில் - விண்வெளி வீரர்களை மட்டுமன்றி, விண்வெளி ஆராய்ச்சிக்குத் தேவைப்படும் 700கிலோ எடையுள்ள பொருள்களைச் சுமந்துசெல்லும் வகையில் - இப்படியாகப் பல நவீன வசதிகள் இதில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு, கிலிப்பர் 10 மீற்றர் நீளமுடையதாக இருக்கும். 145தொன் எடை கொண்டதாக இருக்கும்.

விண்வெளி சுற்றுப்பாதையில் தொடர்ந்தும் பத்து நாள்கள் பறக்கும் வசதியும் இதில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் விண்வெளியில் இதை ஆராய்ச்சித் தளமாகவும் பயன்படுத்திக்கொள்ளலாம். ரஷ்யாவின் 'ஒனேகா ரொக்கெட்' மூலம் இதை விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டு இருக்கிறது. தற்போது சோயுஸ் விண்வெளி ஓடத்தைச் செலுத்தப் பயன்படுத்தப்படும் ரொக்கெட்டை விட, ஒனேகாவில் பல நவீனமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ரஷ்யாவின், 'எனெர்ஜியா' விண்வெளிக் கழக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத் துணைத்தலைவர் பொரிஸ் சாத்னிகோவ், இத்தகவல்களை மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 03 - 1978

மறைவு 24 - 02 - 1996

அமரர் கந்தையா இராஜேஸ்வரன்

ஆண்டு தோறும்
குமைகின்றது எங்கள் மனம்!
ஆண்டுகள் ஓடிப்போனாலும்
உன் ஆத்ம நினைவுகளை
அடி நெஞ்சில் சுமந்தபடி
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கிறோம்!

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(28817)(34-16-18)

என்றும் உன் நினைவுகளில்:
- குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1984 - 05 - 02

மறைவு 2004 - 01 - 26

சீவரத்தினம் [illegible]தினி

காற்றோடு வந்த செய்தி
கனவெனவே பேசாதோ?
கலங்கி வாடுகிறோம் சுகந்தாவே - உனைக்
கண்ணீரில் தேடுகின்றோம்
உன்னது பிரிவு எம் செந்நீரைக்
கண்ணீராக மாற்றியது
இறைவனோடு சங்கமித்த - உன்னைச்
சாந்திப் பூக்கள் தழுவட்டும்,
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாளை (25-02-2004) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.

(28824)(35-16-18)

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.

அறிவித்தல்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

கிளை 02, சுன்னாகம்

✲ 13.02.2004 அன்று நடைபெற்ற கூட்டத் தீர்மானத்தின்படி 13.02.2004 தொடக்கம் கீழ்க்காணும் கட்டண விதம் அறவிடப்படுகிறது.

முடியுடன் சேவ் Hair Dressing & Shave	ரூபா 60.00
முடி மட்டும் Hair Dressing Only	ரூபா 50.00
சேவ் மட்டும் Shaving Only	ரூபா 30.00
முடிவெட்டித் தாடி ஒதுக்க Hair Dressing & Shaping beard	ரூபா 70.00
தாடி ஒதுக்க Shaping beard	ரூபா 30.00
சிறுவர்கள் (10 வயதுக்குட்பட்ட) Children	ரூபா 30.00
சிறுவர்களுக்கு Children	ரூபா 40.00
பெண்களுக்கு Ladies Grown up	ரூபா 50.00
மசாஜ் செய்ய Massaging	ரூபா 25.00
கீற்றர் பிடிக்க Hair Drier	ரூபா 20.00
முடியுடன் சேவ் செய்து டை பூசுவதற்கு	ரூபா 150.00
முடி எடுப்பதற்கு	ரூபா 150.00

விடுமுறை தினங்கள்

★ தைப்பொங்கல், தீபாவளி, நத்தார் ஆகிய விடுமுறை தினங்களுக்கு முன்னர் வரும் 6 நாள்களுக்குள் வரக்கூடிய ஞாயிற்றுக்கிழமைகளில் கடை திறக்கப்படும்.
★ ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகும்.

விசேட விடுமுறை தினங்கள்

★ சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை, பொதுக்கூட்டம், விசேட பொதுக்கூட்டம், மே தினம்.
★ மேற்கூறப்பட்ட கட்டணங்களுக்குக் குறைவாக அறவிடப்படும் நிலையம் மீது குற்றப்பணமாக 1000 ரூபா அறவிடப்படும்.
★ ஒவ்வொரு நிலையமும் காலை 7.30 மணிக்கு (பு.நே.) திறந்து இரவு 8.00 மணிக்கு (பு.நே.) மூடப்படல் வேண்டும்.

(28826)(34)

- நிர்வாகம்.

சுகாதாரத் தொழிலாளருக்கு பதவி உயர்வு

வலி.தென்மேற்கு,பெப்.24

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் சுகாதாரத் தொழிலாளர்களாகக் கடமையாற்றும் 70பேர் சாதாரண தொழிலாளர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களான மேற்படி 70 பேருக்கும் இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் சாதாரண தொழிலாளர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நியமனக் கடிதங்கள் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளரினால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-135)

விற்பனைக்கு

WP HF.....தொடரிலக்கமுடைய CANTER (Guts) பெற்றோல் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
நல்லசமாரியன்,
கோண்டாவில் கிழக்கு (சந்தி).
0777 242511
021 222 2488

(28829)(16-18)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30 - 01 - 1944

மறைவு 25 - 01 - 2004

Dr. திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம் R.M.O

கடந்த 25.01.2004 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி Dr.திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (24.02.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறுகின்றது. இதில் அனைவரையும் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(28831)(35-16-18)

-குடும்பத்தினர்.

நான்காவது பிறந்ததின வாழ்த்து

24.02.2004

HAPPY BIRTHDAY



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த செல்வன்

விஜயவர்மன் லரூசன் (LARUSAN)

நான்காவது பிறந்த நாள்
ஆண்டவன் அருளைப் பெற்றும்
அறிஞர்தம் ஆசி பெற்றும்
வேண்டிய கல்வி கற்றும்
மேன்மை செய்கலைகள் கற்றும்
நீண்டிடும் வாழ்வு பெற்றும்
நிலத்துளோர் போற்றும் வண்ணம்
ஈண்டுநம் லரூசன் வாழ்க
என அன்பால் வாழ்த்துகின்றோம்

EXPO VIDEO COMPLEX
Professional video film makers,
No.7,K.K.S. Road, Kondavil
T.P.NO:021 - 3100

திருமதி ரேணுகா விஜயவர்மன் (அம்மா)
எக்ஸ்போ நிறுவன பணியாளர்கள்.

(C/33424) (41-18-19)

உதயன்

ஜனாதிபதியின் முயற்சி

'தேர்தல் முடிவுகளால் தொங்கு நாடாளுமன்றம் ஒன்றே உருவாகும். பிரதான கூட்டணிகள் இரண்டில் எதற்குமே தனிப்பெரும்பான்மை கிடைக்காது. அந்நிலையில் ஆட்சியைத் தீர்மானிக்கப்போகும் சக்தியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே உருவெடுக்கப் போகின்றது.'

- பிரபல செய்தி ஏஜென்ஸியான ரோய்ட்டரின் கருத்துக் கணிப்பு இத்தகைய எதிர்வுகூறலைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றது.

1977இற்குப் பின்னர் மிகவும் முக்கியமான ஒரு பொதுத்தேர்தலை தமிழ்மக்கள் இன்று எதிர்கொள்கின்றார்கள்.

அன்று - பிரிந்து சென்று தமிழீழம் அமைப்பதே தங்கள் ஒரே முடிவு என்பதை சர்வதேச சமூகத்துக்கு ஒரே குரலில் ஓங்கி ஒலித்து, எடுத்துக் காட்டுவதற்கு எழுச்சி கொண்டார்கள் தமிழர்கள். அந்தத் தேர்தலின் முடிவாக அதற்கு அப்பால் மேலதிகமாக ஒரு வாய்ப்புக் கடைத்தது தமிழர் தரப்புக்கு. அரசு அமைக்கும் கட்சிக்கு மாற்றாக எதிர்க்கட்சித் தலைமை ஆசனத்தில் அமரும் சந்தர்ப்பம் தமிழர்களுக்குக் கிட்டியது. பேரினவாதிகளின் அடக்குமுறைப் பாணியிலான அரசமைப்புத் திருத்தம் மூலம் அந்த வாய்ப்புப் பின்னர் தமிழர்கள் தரப்பிலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டது.

இன்று - 1977இல் இருந்தது போல தங்களது அபிலாஷைகளை வெளிப்படுத்துவதாகத் தமிழர் தாயகம் எழுச்சிகொண்டிருக்கின்றது. அதற்கு அப்பால் 77 தேர்தல் முடிவுகளைப்போல் இத்தேர்தல் முடிவுகளிலும் மேலதிக ஒரு வாய்ப்பாக, இந்தத் தேசத்தின் ஆட்சியாளர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் தமிழரின் ஐக்கியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த யதார்த்தம் இப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வரை அனைவருக்கும் ஓரளவு புரியத் தொடங்கிவிட்டது என்பது கண்கூடு.

அதனால்தான் தமிழர் தரப்போடு சமரசம் பிடிக்கப் படாதபாடுபடுகின்றார் அவர் என்ற தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

"என்னிடம்தான் நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சும் என்வசம்தான். நாடாளுமன்றத்திலும் எனக்குப் பெரும்பான்மை இருக்குமானால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் காட்டிலும் மிகுந்த தளர்வு நிலையோடு - அதிக விட்டுக்கொடுப்புக்களோடு - தமிழர் தரப்புடன் என்னால் பேச்சு நடத்த முடியும்" - என்ற சாரப்பட ஜனாதிபதியிடமிருந்து புலிகள் தரப்புக்கு சமிக்ஞை காட்டப்படுவதாக ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

நாளை, கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் வன்னிக்கு விசேட ஹெலிகொப்டரில் சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனோடு பேச்சு நடத்தவிருக்கின்றார்.

அதேவேளை, இன்று லண்டனில் (இலங்கை நேரப்படி இன்று பின்னிரவில்) நோர்வேயின் விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கின்றார்.

லண்டனிலும், கிளிநொச்சியிலும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் புலிகளின் அரசியல்துறை சார்ந்த முன்னணிப் பிரமுகர்களை நோர்வே அனுசரணையாளர்கள் சந்திப்பதில் ஏதேனும் சூக்குமம் இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் தொடர் நடவடிக்கையாகக் கடந்த வாரம் அமெரிக்காவில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தின் பெறுபேறுகள் குறித்துப் புலிகள் தரப்புக்கு விளக்கம் அளிப்பதற்கே லண்டனிலும் கிளிநொச்சியிலும் இந்த ஏககாலச் சந்திப்புக்கள் என்று ஒப்புக்குக் காரணம் கூறப்படுகின்றது. இருந்தாலும், ஜனாதிபதித் தரப்பின் சில செய்திகளை புலிகளுக்குத் தெரிவிப்பதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தை நோர்வேத் தரப்பு பயன்படுத்தக்கூடும் என்று அனுமானிக்கப்படுகின்றது; நம்பப்படுகின்றது.

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தமக்கு வசதியாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக முன் கூட்டியே களநிலைமையைச் சாதகமாக்க முயல்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க என்பதும் புலப்படுகின்றது.

சமாதானப் பேச்சு நடத்துவதற்கு சிங்கள மக்களின் அனுமதியை - ஆணையை - பெற்றுவரும் எந்தத் தரப்புடனும் தாம் பேச்சுநடத்தத் தயார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

விட்டுக்கொடுப்புடன் கூடிய பேச்சுக்களை நடத்துவதுதான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உண்மையான விருப்பம் என்றால் பின்கதவால் - இரகசியச் செய்திகளை - அனுப்புவதை விடுத்து, இத்தேர்தலில் பகிரங்கமாக அதை அறிவித்து சிங்கள மக்களின் ஆணையை அதற்கு அவர் பெற்றுவருவதே சரியான வழிமுறையாகும்.

ஆனால், அப்படிச் செய்வதாயின், தாம் இப்போது சிங்களப் பேரினவாதிகளுடன் வைத்திருக்கும் கூட்டை இழக்கவேண்டியிருக்கும் என்பதுதான் அவருக்கு உள்ள இக்கட்டாகும்.

சிங்களப் பேரினவாதிகளையும் அணைத்துக் கொண்டு, அதேநேரம் தமிழருடன் சமரசம் பேசுவது என்பது முடியாத காரியம் என்பதை அவர் புரிந்துகொள்வது நல்லது.

மாணவருக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவை யாழ்ப்பாண பொது நூலகத்தில் நேற்று ஆரம்பம்

23 வருடங்களின் பின்னர் பணி

யாழ்ப்பாணம்,பெப்.24

சுமார் 23 வருடங்களின் பின்னர் யாழ். பொதுநூலகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனது சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது. முதற்கட்டமாக மாணவர்களுக்கான விசேட சேவை மட்டுமே நேற்று ஆரம்பமானது. இன்னும் சில மாதங்களின் பின்னரே அது பொதுமக்களின் பாவனைக்கு முற்றாகத் திறந்து விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக மாணவர்கள் நேற்றுத் தம்மை உறுப்பினர்களாகப் பதிவுசெய்துகொண்டனர். ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், உயர்கல்வி (பி.ஜி.ரி., சி.ஐ.எம்.ஏ.) பயிலும் மாணவர்களுக்கும் தேவையான முக்கியமான உசாத்துணை நூல்கள் நூலகத்தில் உள்ளன. எனவே, இந்த மாணவர்களின் கல்விச் செயற்பாட்டைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுநூலகம் தனது சேவையை ஆரம்பித்துள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தன.

நூலகத்தில் 30 மாணவர்கள் இருந்து கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடிய கற்கைகூடம் ஒன்று அமைந்துள்ளது. காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை பொதுநூலகம் மாணவர் பாவனைக்கெனத் திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுநூலகத்தைப் பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிப்பது தொடர்பாக யாழ். மாநகர ஆணையாளரிடம் கேட்டபோது -

நூலகத்தைப் பராமரிப்பதற்கென எமக்கு மாதாந்தம் 5 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. எனினும், அதற்கான நிதி எம்மிடம் இல்லை. இதனைவிட, நூலகத்துக்கான ஆளணியினரும் எம்மிடம இல்லை. நூலகம் முழுமையாக இயங்குவதற்கு 75பேர் எமக்குத் தேவை. அந்தளவு ஆளணி இப்போது இல்லை. இவற்றைவிட பொதுமக்களை அனுமதிப்பதற்கு இங்கு பல வசதிகளையும் செய்யவேண்டியுள்ளது.

தற்போது எமது மாணவர்களின் கல்விக்குத் தேவையான பல புத்தகங்கள் நூலகத்தில் உள்ளன. இவற்றை மாணவர்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு பலர் எம்மிடம் கோரியிருந்தனர். இதற்கமைய எமது மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கென்றே, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவையை ஆரம்பித்துள்ளோம். பொதுமக்களின் பாவனைக்கு நூலகத்தை அனுமதிக்க இப்போது இயலாது உள்ளது - என்று விளக்கினார். (ம-8)

நேற்று மாணவர் பாவனைக்கு அனுமதிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் தமது உறுப்புரிமையைப் பதிவுசெய்து கொள்வதையும் அங்குள்ள நூல்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். *(படம் : தேவா)*

தீவக வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க விரைவான நடவடிக்கைகள் தேவை

பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

மண்டைதீவு,பெப்.25

தீவகத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இங்கு நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டிற்குப் பிரதான காரணம் ஆசிரியர்கள் தொடர்பாக ஓர் ஒழுங்கான இடமாற்றத்திட்டம் இல்லாமையாகும். இடமாற்றத் திட்டத்தில் இறுக்கமான ஒழுங்கமைப்புப் பேணப்படுமாயின் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கிவிடும்.

- இவ்வாறு தெரிவித்தார் தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன்.

மண்டைதீவு மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் சு.கனகரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறிய ஆசிரியர்கள் 33பேரை தீவகப் பாடசாலையில் நியமித்துள்ளோம். இவர்கள் இங்கு பயனுள்ள சேவையை ஆற்றி வருகின்றனர். இந்த வருடம் வெளியேறும் ஒரு தொகுதி ஆசிரியர்களை இங்குதான் நியமிக்கவேண்டி ஏற்படும். அப்பொழுது இந்தப் பாடசாலையின் ஆசிரியப் பற்றாக்குறை நீக்கப்படும்.

மேலும் யாழ்ப்பாணம், வலிகாமம் போன்ற வலயங்களில் ஆசிரிய வெற்றிடங்கள் இல்லாத காரணத்தால் இவர்களை இந்தப் பகுதியிலேயே நியமிக்கவேண்டிவரும். இந்த வலயங்களில் உள்ள ஆசிரியர்கள் வலிகாமம், யாழ்ப்பாணம், அடுத்த ஊர் பாடசாலை என்ன நிறம் என்று தெரியாத அளவிற்கு ஒரே பாடசாலையிலேயே தொடர்ச்சியாகக் கடமையில் உள்ளனர்.

இதற்குப் பிரதான காரணம் ஒழுங்கான இடமாற்றத்திட்டம் இல்லாமையாகும். இந்த வருடம் ஒப்பந்த அடிப்படையில் இங்கு வந்த 36 ஆசிரியர்களை விடுவித்துள்ளோம். அவர்களுக்குப் பதிலாக யாழ்மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 16 ஆசிரியர்கள் இங்கு இடமாற்றப்பட்டனர். ஆனால், அவர்களுள் ஒன்பது பேர் மட்டுமே கடமை ஏற்றுள்ளனர். மற்றவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

இந்தப்பாடசாலையில் A-9 வீதி திறந்த பின்பே மாணவர் தொகை அதிகரித்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பே பெண் ஆசிரியர்களை இங்கு நியமிக்கக் கூடியதாக இருந்தது. அதற்கு முன் இறுக்கமான உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இந்த ஊரைச் சேர்ந்த ஆசிரியர்களே இங்குவர மறுத்திருந்தனர். வலய மேற்பார்வைக்காகப் பாதுகாப்புப் படையினரின் அனுமதிபெற்றே நாங்கள் இங்கு வரவேண்டி இருந்தது.

அந்த நேரத்தில் மிகக்குறைந்த ஆசிரியர்களுடன், பல சிரமங்களின் மத்தியில் அப்பொழுது இந்த அதிபர் நடத்திய தால்தான் இந்தப் பாடசாலை மூடப்படவில்லை. மாணவர்களாகிய நீங்கள் விளையாட்டுப் போட்டி நடத்த அதுவே காரணம்.

தீவகப் பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாகவே உள்ளனர். வன்னிப்பகுதியில் உள்ள ஒதுக்குப்புறமான பாடசாலைகளில் கூட 1000இற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். வவுனியா மகாவித்தியாலயத்தில் 3000 மாணவர்களுக்குமேல் கல்வி கற்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள தேசியப் பாடசாலைகளில் கூட அந்தளவிற்கு மாணவர்கள் இல்லை. இடப்பெயர்வே அதற்குக் காரணம்.

கல்வியில் போட்டி இருக்கவேண்டும். மாணவர்கள் பெற்றோர் முயன்றால் மட்டுமே பின்தங்கியுள்ள பாடசாலைகள் விழித்தெழ முடியும். அந்த வைரம்பாய்ந்த உறுதியை உங்களிடம் என்னால் காணமுடிகிறது. - என்றார் அவர். (ம-88)

காக்கைதீவுக் கழிவுகளிலிருந்து பொலித்தீன் பிரித்தெடுக்கப்படுகிறது

மாநகரசபையின் பணிக்குச் சிலரால் தடங்கல்

காக்கைதீவில் கொட்டப்படும் கழிவுகளில் இருந்து சுற்றுச் சூழலுக்கு ஆபத்தான பொலித்தீன்களை அகற்றுவதற்கு யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கு கொட்டப்படும் குப்பைகளுக்குத் தீ மூட்டுவதன் மூலம் சிலர் சபையின் நடவடிக்கைகளுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

- இப்படித் தெரிவித்தார் யாழ்மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம்.

குடாநாட்டில் சேகரிக்கப்படும் கழிவுகள் மாநகர சபையால் காக்கைதீவுப் பகுதியிலேயே தற்போது கொட்டப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளில் உள்ள, சுற்றுச் சூழலுக்கு ஆபத்தை விளைவிக்கும் பொலித்தீன்களைப் பிரித்தெடுக்கும் பணியை மாநகரசபை மேற்கொள்கின்றது. எடுக்கப்படும் பொலித்தீன்கள் பொதி செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

காகைதீவில் இரும்புகளைத் தேடி எடுக்கும் சிலரால் இந்தப் பணிகள் பாதிக்கப்படுகின்றன என்கின்றன மாநகரசபை வட்டாரங்கள். குப்பைகளில் இரும்புகளைத் தேடுவோர் தமக்கு வசதியாகக் குப்பைகளுக்கு எரியூட்டி விடுகின்றனர். இதனால், பொலித்தீன்களும் சேர்ந்து எரிந்து சுற்றுச் சூழலை மாசுபடுத்துகின்றது.-என்று தெரிவித்தார்.(ம-6)

நாளை

மாசி 13
புதன்கிழமை
(25.02.2004)
திதி : பஞ்சமி
பகல் 5.01 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
இரவு 7.02 வரை
சுபநேரம்: 5.00-6.30
ராகுகாலம்: 12.30-2.00
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

அரசியல் வாழ்வில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தரப் பகைவனும் இல்லை.

திருட்டு மின்சாரம் பெறுவோர் எண்ணிக்கை நகரில் அதிகரிப்பு

தமது வீட்டுத் தேவைகளுக்காகத் திருட்டு மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை யாழ். நகரப் பகுதியில் அதிகரித்துள்ளது என்று மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருட்டு மின்சாரம்பெறும் சந்தர்ப்பங்களில் சிலர் உயிரிழக்கவும் நேரிடுகிறது.

அத்துடன், சீரான மின்விநியோகத்துக்கும் தடையாகவும் இந்தச் செயற்பாடு அமைகிறது. எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மின்சார சபைக்கு நஷ்டமேற்படுத்துவதாக எண்ணிக்கொண்டு தமக்கு உயிராபத்துக்களை ஏற்படுத்தி வருகின்றனர் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம-10-ரி)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

குறோட்டன், பாம்ஸ், ஈரப்பலா, அடுக்கு செவ்வரத்தம் கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 6563. (28783)

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட நல்ல நிலையிலுள்ள Room A/C Fridrich (Window Type) விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.ஆனந்தன், அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில். T.P.: 077 6034090. (28821)

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971இல் பிறந்த, உதயத்துச் செவ்வாய், U.K.இல் work permitஇல் தொழில்புரியும் ஸ்பொன்சர் செய்யக்கூடிய M.Sc. பட்டதாரி மணமகளுக்கு, நற்குணமுள்ள பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு. விள. இல.:2171, C/o உதயன். (28692)

கனடா பிரஜாவுரிமையுடைய, 30 வயது, 5 அடி உயரமான, வெள்ளை நிறம் பொருந்திய, எக்கவுண்டன் டிப்ளோமா முடித்த, றோமன் கத்தோலிக்க மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. கனடாவில் குடியேற நல்லதொரு வாய்ப்பு. தொடர்புகளுக்கு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்தவாசன் ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். (28827)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968இல் பிறந்த, 8இல் செவ்வாயுடைய, ஆயிலிய நட்சத்திரம், கனடாவில் தொழில்புரியும் (ஸ்பொன்சர் செய்யக்கூடியவருக்கு) மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு 535, பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P.: 021 222 3480 (28819)

தவறிவிட்டது

யாழ். நகரிலிருந்து பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது 077 6199082 என்ற இலக்கமுடைய கைத்தொலை பேசி தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கானான ஜெப ஆலயம், இருபாலை என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். T.P.: 7063 சன்மானம் வழங்கப்படும். (சி33416)

கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி காராள சிங்கம் பிரதீபா என்பவருடைய தே.அ.அ. (இல.816534160V) யாழ்.பஸ் நிலையத்துக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் 21.02.2004 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது இ.கதிர்காமநாதன், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் ஒப்படைத்துதவவும்.(28828)

நாவற்குழியைச் சேர்ந்த இராசரத்தினம் இராசமணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 347990825V), விசேட அடையாள அட்டை மற்றும் ஞா.அபராஜிதனின் சித்திரப் பயிற்சி அறிமுக அட்டை மற்றும் சில ஆவணங்களுடன் சிறு தொகைப் பணமும் அடங்கிய Hand bag முத்திரைச் சந்திக்கும் கந்தர்மடம், ஆத்திகுடி வீதிக்கும் இடையில் 22-02-2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.29, நாயன்மார் வீதி, நல்லூர் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (28810)

திருநாவுக்கரசு ஜெயகரன் என்பவரது தே.அ.அ (723100402V), வி.அ.அ என்பன 18-02-2004 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 157, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (28818)

கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 25.02.2004 மாலை விநியோகிக்கப்படும். பிறிமா புறொயிலர் குஞ்சுகள் விலை 38/= சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 26.02.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No: 2867. (28793)

வாடகைக்கு

கொன்வன்ற் பெற்றோல் செற் அருகில் சகல வசதிகளுடன் அறைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். மேல் மாடி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: வி.இல.:2175, மே/பா உதயன். (28823)

கணனி பயிற்றுவிப்பாளர் தேவை

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையால் நடத்தப்படும் கணனிப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு அனுபவமும், தகைமையும் உள்ள பயிற்றுவிப்பாளர் தேவை.
ஒருவருடம் தங்கிப் பயிற்சியளிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். வசதிகள் செய்து கொடுக்கப்படும். ஊதியம் நேரில் பேசித்தீர்க்கலாம்.

07-03-2004 இற்கு முன்னர் சுயவிவரத்துடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தென்னிந்திய திருச்சபை, நெடுந்தீவு.

(28822)(26-21-16-19)

Dialog GSM

kit

டயலொக்
கையடக்க GSM
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

Sri Murugan
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. :021 222 5392
FAX :222 3214.

எந்நேரமும்
உன்னுடன்...!

(C/33362)(38-19-16)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 10 - 07 - 1930

ஆண்டவன் அடியில் 06 - 03 - 2003

அமரர் **தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**

அன்பும், பண்பும் நிறைந்த எம் பப்பாவே!
பாசம் நிறைந்த உங்கள் அரவணைப்பும்
கலகலப்பான பேச்சும்
கனிவான சிரிப்பும்
என்றென்றும் எங்கள் நெஞ்சில் நிழலாடும்.

6, பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(28784) (40-19-16-21)

நீங்கா நினைவலைகளில்.....

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 04 - 1944 உதிர்வு 02 - 03 - 2002

அமரர்
கதிர்காமு செகராசா
(ஓய்வுபெற்ற நடத்துநர். இ.போ.ச.)

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 - 09 - 1981 உதிர்வு 19 - 04 - 1996

மேனகா செகராசா

அன்பாய் அரவணைத்து
அகல் தீபமாய் நின்று
எம் குடும்பம் காத்த குலபதியே!
இன்று நீ எமைப் பிரிந்து
ஈராண்டாகியது ஆனாலும்
உம் நினைவு ஓயாது ஒலிக்குதையா!

நிரந்தர முகவரி :- வயாவிளான் மேற்கு.
தற்காலிக முகவரி : பழைய வீதி, ஆறுகால்மடம்.

பிரிவால் துயருறும்:
-குடும்பத்தினர்.

(28723) (41-14-19)

சக்தியை இப்பொழுது கண்டறியுங்கள் !

UMAZAKI
Judo



அழகும் எழிலும் மிக்க தோற்றம்
எங்கும் எதையும் வெல்லும்
வல்லமை கொண்ட உண்மையான தோற்றம்
● பாதுகாப்பு. ● வசதி. ● சிக்கனம்.
125CC என்ஜின் பவர்

உமஸாக்கி ஜூடோ - சக்தியை இப்பொழுது கண்டறியுங்கள்

Access Graphics

ஏக முகவர்கள்
சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 தொலைபேசி: 2324261-5, 2337283-5 ஃபக்ஸ்: 2446554
நாராயன் ஹார்ட்வெயார் யாழ்ப்பாணம், **யசோ மோட்டர்ஸ்** ஸ்டென்லி வீதி யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்

அர்ப்பணிப்பால் மீட்கப்பட்ட மண்ணிலேயே தேசியப் பெரு விளையாட்டுவிழா நடக்கிறது!

ஆரம்ப நிகழ்வில் 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் உரை

கிளிநொச்சி,பெப்.24

எமது போராட்டத்தில் எத்தனையோ அர்ப்பணிப்புகளால் மீட்கப்பட்ட மண்ணில் தமிழீழத் தேசியப் பெரு விளையாட்டு விழா இடம்பெறுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன்.

கடந்த 20ஆம் திகதி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாவின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழா உலகம் உற்றுப் பார்க்கக் கூடிய அளவிற்குப் பிராமாண்டமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது மூன்றாவது தேசியப் பெரு விளையாட்டு விழாவாக இருந்தாலும் கூட, ஒரு முதிர்ச்சி அடைந்த நிலையைப்பெற்றுள்ளது. சென்ற வருடத்தை விட இந்தமுறை பல முன்னேற்பாடுகளைச் செய்து சிறந்த முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

விளையாட்டு ஏற்பாட்டாளர்களால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழில் விடுதலை பெற்றுவிட்ட ஒரு நாட்டின் தேசிய விளையாட்டு விழாவாக இதனைச் சித்திரித்திருக்கின்றார்கள். வரலாற்று மாற்றத்திற்குப் பின் இந்த மைதானத்தில் இவ்விளையாட்டு விழா நடைபெற ஆரம்பித்திருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டத்தில் எத்தனையோ அர்ப்பணிப்புகளின் மத்தியில் இந்த இடம் மீட்கப்பட்டுள்ளது. இடிபாடுகளும் நினைவுச் சின்னங்களும் ஆங்காங்கே இருக்கின்றன.

இந்த மண்ணிற்கு வருகின்ற ஒவ்வொருவரும் கடந்த கால யுத்தக் கோரங்களையும் அதிலிருந்து தாயக நிலப்பரப்பை மீட்ட வரலாற்றுச் சாதனைகளையும் கண்டு செல்ல முடியும். அந்த அடையாளங்களையும் சுவடுகளையும் தாங்கி நிற்கும் கிளிநொச்சி மாநகரம் உண்மையிலே நவீன வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

எமது விடுதலைப் போராட்ட அர்ப்பணிப்புகளும் நிலைநிறுத்தப்பட்ட சாதனை நிகழ்வுகளும் இராணுவக் கொடூரங்களால் எமது மக்கள் பட்ட துன்பங்களும் எப்பொழுதும் எமது மனங்களில் நிலைநிறுத்தப்படவேண்டும் - என்றார்.

தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

எமது தேசியத் தலைவருடைய கனவுகளில் விளையாட்டுத்துறையும் ஒன்று. இந்த விளையாட்டுத்துறையின் மூலம் எமது இளைய தலைமுறையின் ஆரோக்கியமான, திடகாத்திரமான வாழ்வை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

சர்வதேசத்தில் தமிழர்களால் சாதனை படைக்க முடியும் என்ற வரலாற்றைத் தோற்றுவித்தவர் இங்கு அமர்ந்துள்ள எதிர்வீரசிங்கம். சர்வதேசத்தில் விளையாட்டில் சாதனைகளைத் தமிழினம் படைக்கும் என்ற ஒரு வரலாற்றை உருவாக்க முடியும் என்ற எதிர்பார்ப்புடன் நாங்கள் விளையாட்டுத்துறையை வளர்த்தெடுத்துச் செல்கின்றோம். நிச்சயம் எமது சந்ததியினர் சர்வதேச விளையாட்டரங்கில் சாதனை படைத்தான் தமிழன் என்ற வரலாற்றுச் செய்தி கிடைக்கும் வரை எமது முயற்சிகள் தொடரும். - என்றார். (ஒ-5)

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட கல்விச் செயற்பாட்டு அறையை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியானந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*

விழிப்புலனற்றோர் சங்கம் அரசு உதவியின்றிச் சிரமம்

அதன் செயலாளர் கவலை

யாழ்ப்பாணம்,பெப்.24

அரசின் உதவிகள் ஏதுமின்றி விழிப்புலனற்றோர் சங்கம் அல்லாடுகிறது என்று சங்கத்தின் செயலாளர் வி.கனகசபை கவலை தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெருவில் சங்கம் இயங்கி வருகின்றது. விழிப்புலனற்ற 120 பேர் இச்சங்கத்தில் இப்போது அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு சுயதொழில் கடன்கள், கல்வி வசதிகள், மாதாந்த உதவித்தொகைகள் போன்ற உதவிகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன், எமது தலைமையகத்தில் தங்கியுள்ளவர்கள் கடித உறை செய்தல், கயிறு உற்பத்தி போன்ற தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

எமது அங்கத்தவர்கள் இயக்கும் இசைக்குழு நிகழ்ச்சிகளை நடத்தி அதன்மூலம் வரும் வருமானத்தை எமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றோம்.

எமக்கு அரசினால் எந்தவித உதவிகளும் கிடைப்பதில்லை என்றார் அவர். (ஒ-ரி)

அதாவுல்லா அணி கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்து

கொழும்பு,பெப்.24

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், அஸீஸ் ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இவர்களின் ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில், அதாவுல்லாவும் மற்றும் மூவரும் ஏற்கனவே அவர்கள் அங்கம்வகித்த முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அஷ்ரப் காங்கிரஸ் போன்ற கட்சிகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர் என அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இலட்சியத் தேர்தலின் மூலமே வெற்றி இலக்கினை அடையமுடியும்

திருமலையில் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

- திருமலை மாவட்டச் செய்தியாளர் -

திருகோணமலை,பெப்.24

தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான இடைக்கால வரைபு ஒன்றினை தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்து இதற்கான பேச்சுக்களை மேற்கொள்ள முனைந்த வேளை சூழ்ச்சிகரமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்று நாடு ஒரு பொதுத்தேர்தலை எதிர்நோக்கியுள்ளது.

இந்தநிலையில், தமிழ் மக்கள் இந்தத் தேர்தலை ஓர் இலட்சியத் தேர்தலாக எண்ணிச் செயற்படவேண்டும். இதன்மூலமே நாம் அடையமுயற்சிக்கும் இலக்கினைச் சென்றடைய முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்டத் தலைமை வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன். தனது இல்லத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஆதரவாளர் மற்றும் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போது இரா.சம்பந்தன் இதனைத்தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இடைக்கால வரைபு சமர்ப்பிக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே அதனைச் சிதறடிக்கும் வகையில் அமைச்சரவை மாற்றம் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட சதி என்றே கூறவேண்டும்.

இத்தகைய அதிகார நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் தமிழினம் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். நமது ஒற்றுமையின் பலத்தை உலகறியச்செய்ய வேண்டும்.

இதேவேளை -

தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஓரணியில் இணைந்துவிட்டார்கள் என்பதைப் பேரினவாத சக்திகளுக்கும் உணர்த்த வேண்டும். எதிர்வரும் பொதுத் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமல்ல, இடைக்கால வரைபு என்பது தமிழினத்தின் ஒட்டுமொத்த சக்திகளின் வெளிப்பாடே என்பதனையும் சகல மட்டங்களிலும் உணர்த்த வேண்டும். இதன்மூலம் நாம் பெருவெற்றி அடைவதுடன், எமது இலக்கினை அடையும் காலகட்டமும் அண்மித்துவிடும் என்றார். (எ)

செவ்வாயில் விண்கலம் இறங்கும் இந்தக் காலத்தில் நெடுந்தீவு மக்களுக்கோ கடல் தாண்டச் சிரமம்

'ஸ்பிரிட்' விண்கலம் பன்னிரண்டு கோடி மைல்களைக் கடந்து செவ்வாய்க் கிரகத்தின் தரையைத் தொட நாஸா கட்டுப்பாட்டு அறை குதுகலத்தில் மிதந்தது. அந்தவேளை ஆறு மைல்கள் தூரமான நெடுந்தவுக் கடலைக் கடக்க மக்கள் படும் அவலங்களோ எண்ணிலடங்காதுள்ளன.

நெடுந்தீவுக் கடல் வழிப் பயணத்திற்கெனக் கடந்த காலங்களில் ஏழு படகுகளை அரசு வழங்கியிருந்தது. அத்துடன், அவற்றிற்கென பணமும் வழங்கப்பட்டது. எனினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவற்றை உரிய முறையில் கண்காணிக்கத் தவறியதாலும், போரினால் ஏற்பட்ட அசம்பாவிதங்களாலும் படகுச் சேவை சீர்குலைந்தது.

நெடுந்தீவு லக்ஸ்மன்

இன்று நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்து சுமார் நான்கு மாதங்களுக்கு மேலாகின்றது. அரச அலுவலகங்களின் மற்றும் 'பஜரோ'க்கள் பழுதடைந்தால் துரிதமாக அவற்றைத் திருத்தி அவற்றில் பவனிவரும் அதிகாரிகளுக்கு படகுகளைச் சீராக்கி மக்களுக்குச் சேவையைத் தொடர வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல்வாதிகளும் வார்த்தைகளால் மக்களைத் திருப்திப்படுத்திவிட்டு மறைந்து விடுகிறார்கள். இயல்பு வாழ்க்கை, மனித உரிமை என்பதெல்லாம் சாதாரண மக்களை ஏமாற்றும் சொற்களாகிவிட்டன.

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்தில் இப்போது ஈடுபட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகும் கோளாறு பிடித்த இயந்திரத்துடனேயே இன்னமும் ஓடிக்கொண்டிருக்கின்றது. இது மிகவும் பழைய இயந்திரம். இதுவும் எப்போது வேண்டுமானாலும் பழுதடையலாம். இதனைப் பல.நோ.கூ.சங்கத் தலைவர் கோ.பாலசிங்கம் சில மாதங்களுக்கு முன்னதாகவே உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரியப்படுத்தியிருந்தார். மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் அப்போது அவர் வலியுறுத்தியிருந்தார்.

சங்கத்தின் பெரிய படகான 'சமுத்திர தேவா' இப்போது திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இப்படகில் பொருத்தப்பட்ட இயந்திரம் சுமார் 50 வருடங்கள் பழைமையானது. 'பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தால் புங்குடுதீவு பல நோ.கூ.சங்கத்திடம் கையளிக்கப்பட்ட 'சமுத்திராதேவி' படகிற்கென 1966ஆம் ஆண்டு அளவில் கையளிக்கப்பட்ட இயந்திரம் இது.

பல நோ.கூ. சங்கத்தின் இரு படகுகளுக்கும் இரண்டு புதிய இயந்திரங்கள் அவசியம். ஆயினும், மிகப் பெரிய தொகையைச் செலுத்தி ஓர் இயந்திரத்தையாவது புதிதாகக் கொள்வனவு செய்யக்கூடிய வசதி சங்கத்திடம் இல்லை. அரசோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ நன்கொடையாக அன்றேல் நீண்ட காலக் கடன் அடிப்படையில் இயந்திரத்தை வழங்க முன்வந்தால் உதவியாக இருக்கும் என்கிறார் தலைவர்.

"நொண்டிக் குதிரையாயினும் சவாரிக்குக் கைகொடுப்போம்" என்ற நோக்கில் சங்கத்தின் சிறிய படகான 'உதயதாரகை', "குருவி தலையில் பனங்காய்" போன்று, கடந்த காலங்களில் அரச மோட்டார் படகுகள் ஸ்தம்பிதமடையும் போதெல்லாம் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் உடன் அதிகாரிகளைத் தட்டிக் கேட்டு வந்தது. அதன் உறுப்பினர்கள் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளச் செய்தனர். இன்று அந்தக் கழகம் இயங்காதுள்ளது. இதனால், படகுச் சேவைப் பிரச்சினை தட்டிக் கேட்க ஆளில்லாது தொடர்கிறது.

உண்மையில் இந்தப் பிரச்சினை முடிவின்றித் தொடர மக்களே காரணம். "துறைமுகத்தில் நின்று வெறுமனே திட்டித் தீர்த்துவிடுவதால்" எந்தப் பிரச்சினையும் தீர்ப்போவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

அரசியல்வாதிகள் அழைத்தால் மட்டும் வெளியிடங்களுக்கு திரண்டு செல்லும் மக்களால் இந்த அத்தியாவசியப் பிரச்சினைக்காக உரிய அலுவலகங்களுக்குச் சென்று வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருப்பது ஏன்? என்பதுதான் புரியாமல் உள்ளது. ★

சிறப்புற நடைபெற்ற மகளிர் இல்ல நிகழ்வுகள்

வலி.வடக்கு,பெப்.23

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் சிவத் தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்றன.

மங்கள விளக்கை தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதிவண. ஜெபநேசன் அடிகள், முன்னாள் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், யாழ். மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு, செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

மகளிர் இல்லத்தில இருந்து பாடசாலை சென்றுவரும் மாணவர்களில் பாடசாலை, கோட்ட, வலய மற்றும் மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு திருமதி ஜெகதீஸ்வரி வைத்திலிங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இதனைத் தொடர்ந்து இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (எ-86)

பரிசில் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

மட்டுவில் தெற்கு,வளர்மதி கல்விக்கழகத்தின் வருடாந்த பரிசில் தின நிகழ்வுகள் நாளை மாலை 5 மணி முதல் வளர்மதி கலை அரங்கில் கல்விக்கழகப் பொறுப்பாளர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, தென்மராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் ச.ஆர்வலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் -

தென்.மட்டுவில் கிராம அலுவலர் வே.கந்தையா, மட்டுவில் மத்தி, சந்திரபுரம் கிராம அலுவலர் க.வாமதேவன், மட்டுவில், நுணாவில் கிராம அலுவலர் வே.துரைசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெறும். (எ)

ஐந்தாம் வருட நெஞ்சகலாத நினைவலைகள்

அன்னை மடியில் 23 ✿ 02 ✿ 1931

அரன் அடியில் 19 ✿ 02 ✿ 1999

திருமதி சரஸ்வதியம்மா செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, ஈவினை அ.த.க.பாடசாலை)

திதி: 24.02.2004 பூர்வபக்கச் சதுர்த்தி

ஆண்டுகள் ஐந்தானாலும் ஆறவில்லை எம் துயரம்
ஈண்டு உங்கள் பிரிவால் உளம் நொந்து வாடுகின்றோம்
மீண்டும் பிறப்புண்டேல் ஒன்று சேர்வோம் அம்மா!

கணவர் – லயன். செ.செல்வரத்தினம்(ஜே.பி.)
(ஓய்வுபெற்ற அதிபர்)
மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

"செல்வம்"
ஈவினை தெற்கு,
சுன்னாகம்.

(28729)(38-11-18)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 30 ✿ 01 ✿ 1944

மறைவு 25 ✿ 01 ✿ 2004

டாக்டர் திருமதி

சறோஜினிதேவி சுப்பிரமணியம்

(இளைப்பாறிய R.M.O.)

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் 1994 தொடக்கம் 2003 வரை அன்புடனும், பண்புடனும், துணிவுடனும் வைத்திய சேவைசெய்து இறைவனடி சேர்ந்த எமது பெருமதிப்பிற்குரிய டாக்டர் அவர்களது ஆத்மா சாந்தியடையவும் கணவர், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் ஆறுதலடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்தியட்சகர்,
வைத்தியர்கள்,
ஊழியர்கள்.

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,
மானிப்பாய்.

(28722)(34-11-18)

நீங்காத நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 ✿ 06 ✿ 1930

மறைவு 26 ✿ 01 ✿ 2004

அமரர் **துரைச்சாமி சின்னராசா**

(இளையதம்பி)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வடமராட்சிப் பிரிவின் வல்வெட்டியைச் சேர்ந்தவரான அமரர் துரைச்சாமி சின்னராசா (இளையதம்பி) அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து அனுதாபந் தெரிவித்தோருக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச்செய்தி அறிவித்தோருக்கும் மற்றும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (24.02.2004) செவ்வாய்க்கிழமை இரவு நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை (25.02.2004) புதன்கிழமை நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார்,உறவினர் ,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவழியாத நினைவைத் தாங்கும்
அன்பு மனைவி,பிள்ளைகள்(கனடா),
மருமக்கள்(கனடா),
பேரப்பிள்ளைகள்(கனடா).

"லிங்கவாசா"
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(38-11-18) (28458)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 ✿ 06 ✿ 1981

உதிர்வு 06 ✿ 03 ✿ 2003

திருமதி விநோதினி திலீபன்

(சுடர் ஒளி, உதயன் நிறுவனங்களின் விளம்பரப் பொறுப்பாளர்)

எங்கள் அன்புச் செல்வமே விநோக்குட்டி!
இதயம் பிழிந்த உன் இறப்பின் வேதனை இன்னும் கனக்கிறது
உன்னை எண்ணும்போதெல்லாம் எங்கள் இதயங்கள் ஒருகணம்
நின்று விடுகின்றது அம்மா.....!
ஓராண்டு கடந்தாலும் மீளாத் துயரில் தேறாத மனங்களுடன்
நாங்கள் துடிக்கின்றோம் அம்மா....!
உடல் வாழாவிட்டாலும் எங்கள் உள்ளத்தில் எம்முடனே நீ
வாழ்கின்றாயே அம்மா.....!
கண்கள் மூடினால் கண்களுக்குள் நிறைந்து, புன்னகையுடனும்
குறும்புடனும் எங்களைக் கொல்லாமல் கொன்று தவிக்க வைக்கிறாயே!
வீட்டார் இல்லை, ஊரார் இல்லை, இந்த உலகத்தையே கலங்க வைத்து
ஓராண்டு ஒரு மாதம் போல் சென்றுவிட்டதே அம்மா....!
சென்றது என்ன நூறாண்டு தான் சென்றாலும், உன் குழந்தை
முகமும் 'அப்பா!, அப்பா!!' என்று கூப்பிடும் உன் குரலும், உன்
அப்பாவை விட்டு என்றும் அகலாது அம்மா!
மூச்சுக்கு மூச்சு உன் கணவர் திலீபனை 'திலீப், திலீப' என்று வீடு
நிறையக் கூப்பிட்டு ஆசையுடன் வாழ்ந்தாயே அம்மா...!
எங்கள் எல்லோரையும் சிரிக்க வைத்து, செல்லம் பொழிந்து! என்றும் நான்கு வயதுப் பிள்ளைபோல்
சோறூட்டி வளர்த்த உன் ஆசை அம்மாவோடு சென்றபோது ஒரு நொடியில் அந்தப் பாதகன்
எங்கள் குடும்பக் கோட்டையை வீழ்த்தி ஓராண்டு சென்றதோ அம்மா?
இன்றும் மீளாத்துயரில் துடித்து நிற்கின்றோம்.
உன் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

தகவல்:
விசாகரட்ணம் (அப்பா), **திலீபன்** (கணவர்).

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, கணவர், மாமா, மாமி,மைத்துனன்.

(C/33392)(34-11-18)

நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு



அமரர் **சு.துரைச்சாமி**

(கிளிநொச்சி 3 ஆம் வாய்க்கால் புளியடி கமக்காரர்)

உலகில் 02-04-1912 உதிர்வு 07-03-2003

23 ஆம் ஆண்டு

அமரர்

து.மனோன்மணி

உலகில் 10-04-1923 உதிர்வு 11-01-1981

கண்ணின் மணிபோலக் காத்து வளர்த்த எம்தாய் தந்தையரே!
அன்பினில் நிறைந்த தாயே! எமதம்பை மனோன்மணியே!
உன்னையே தொடர்ந்து வந்த எங்களது தந்தையே!
கண்ணினால் அருவிநீர் சொரிய கலங்கவே எம்மை வைத்து
விண்ணிலே நீவிர் மறைய விதியினை நாமும் நோக
மண்ணிலே தெய்வமாக வாழ்ந்த எம் பெற்றோரை நினைக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பாசமிகு:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கைதடி வடக்கு,
கைதடி.

(28800)(34-11-18)

யாழ்ப்பாணம்

வாழைச் செய்கையில் மந்தம் தண்டு அழுகல் தாக்கம்

செ.பாலேந்திரன்
விவசாய ஆராய்ச்சி அலுவலர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 15-20 வருடங்களின் முன் பரவலாக 509 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வாழை பயிரிடப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், திருநெல்வேலி, புத்தூர், நீர்வேலி போன்ற வலிகாம நிலப்பரப்பில வாழை தனிப்பயிராகச் செய்கை பண்ணப்பட்டது. இங்கெல்லாம் கதலி, கப்பல், இதரை என்பன பழத்திற்காகவும மொந்தன், சாம்பல் வாழை இனங்கள் சமைப்பதற்காகவும் பயிரிடப்பட்டன. கப்பல் வாழைப்பழத்திற்கான விருப்பு அதிகமாகக் காணக்கூடியதாய் இருந்தது.

ஆனால், கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இடப்பெயர்வு, பொருளாதாரத் தடைகள் போன்றவற்றால் வாழைப்பயிர்ச் செய்கை கைவிடப்பட்டு மிகவும் குறைந்தளவே செய்கை பண்ணப்பட்டது. 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் 260 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வாழை செய்கை பண்ணப்பட்டது. மேலும் கடந்த 10-15 வருடங்களின் முன்னர் பரவலாக இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கப்பல், மொந்தன் இனங்களில் குருத்தடைப்புடன் கூடிய தண்டழுகல் (Heart rot) நோயின் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

நோய்த்தாக்கம்

இருப்பினும், இந்நோய் மிக வீரியமாகக் குறிப்பாகக் கப்பல் இனத்தையே தாக்கி அழிக்கத் தொடங்கியது. இதனால் கப்பல் இனத்தின் செய்கை குறைய நேர்ந்தது. முன்னர் தனிப் பயிராகச் செய்கை பண்ணப்பட்ட கப்பல் இனம் தற்போது வீட்டுத் தோட்டங்களில் 4-5 அடிகள் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இந்த நோய் பெரும்பாலும் குலைபோடும் பருவத்திலுள்ள தாய அல்லது முதலாம், இரண்டாம் குட்டிகளைத் தாக்க ஆரம்பிக்கும். நோயின் ஆரம்ப காலத்தில் இது நடுத்தண்டையே தாக்க ஆரம்பிக்கும். இதை எம்மால் பார்க்க முடியாது. ஆனால், நாள்கள் செல்லத் தெரியக்கூடிய அறிகுறியாகக் குருத்தானது அரைகுறையாக வெளித்தள்ளி விரிய முடியாமல கழுத்துப் பகுதியை அடைத்து நிற்பதைக் காணலாம் நாள்செல்லக் கபில நிறப் புள்ளிகள் குருத்தில் தோன்றி அது வளர்ந்து பின் கருமையாகி இறக்க ஆரம்பிக்கும். இதைத் தொடர்ந்து மற்றைய இலைகளும் மஞ்சள் நிறமாகி மடலில் பொருந்தும் இடத்தில் மடிந்து கீழ்த்தொங்கும்.

தண்டை வெட்டிப் பார்த்தால் அழுகிய இடம் கடினமானதாக இருக்கும். காலப்போக்கில் இப்பகுதியில் ஏற்படும் பற்றீரியாத் தாக்கத்தால் கெட்ட மணம் வீசலாம்.

நோய் காணப்பட்ட இத்தை அண்டிய ஆரோக்கியமான மடலில் ஊதா நிறக்கோடுகளை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் நோய் ஏற்பட்ட இலையானது தண்டினுள் முறுகி வெளிவர முடியாமல் இருக்கத் தொடர்ந்து வரும் இலைகளும் வெளிவர முடியாமல் சிதைந்து அழுகும். வீரியமாய் வளரும் தாவரத்தின் குருத்தானது சிதைந்து பீறிட்டுக்கொண்டு வெளிவரலாம். அப்போது அந்த இலை நெழிவுகளுடனும் சிதைந்தும் காணப்படும். சில சமயங்களில் சில பகுதிகளை இழந்தும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

பங்கசுத் தாக்கம்

இந்த நோயானது பியூசாரியம் மொலிபோமி (Fusarium moniliformi) என்னும் பங்கசுவினால் ஏற்படுகின்றது. இது பயிர்ச்செய்கையின்போது ஏற்படுத்தும் காயங்களூடாக உட்புகுந்து நோயை ஏற்படுத்தும் மேலும் கூர்மூஞ்சி வண்டு (Weevil) விலாங்குப்புழு (Nimatodis) என்பவற்றால் ஏற்படும் காயங்களூடாகவும் நோய்த் தொற்றேற்படவாய்ப்புண்டு. ஈரலிப்பானதும், உயர் சாரீரப் பற்றுமுடைய சூழலில் மிகத் தீவிரமாகவும் துரிதமாகவும் இது தாக்கத்தை ஏற்படுத்தும்.

நோய்க் கட்டுப்பாடு

பெரும்பாலும் கப்பல் இனத்தைத தாக்குவதால் இந்த இனங்கள் உள்ள தோட்டங்களை நல்லவாறு சுகாதாரத்துடன் பேணவேண்டும். எனவே, நோயுற்ற தாவரத்தையும் அதன் பகுதிகளையும் முற்றாக எரித்து அழிக்க வேண்டும். வேறு நோய்கள் தாக்கித் தாவரங்கள் நலிவடையாமல் பேண வேண்டும்.

ஈரலிப்பும் சாரீரப்பதனும் கூடுவதால் நோயின் தாக்கம் அதிகரிக்கும். நீர்ப்பாசன இடைவெளியைக் கூட்டியும், தாவரங்களுக்கிடையிலான இடைவெளியைக் கூட்டியும் ஓர் அடியில் ஒரு தாய், ஒரு குட்டி என்ற எண்ணிக்கையில் பராமரிக்கலாம். புதிதாக நடப்படும்போது நோயற்ற தோட்டத்திலிருந்து குட்டிகளைப் பெற்று நடுமுன்னர் கீழங குப்பகுதி நன்றாக நனையும்படி ஒரு (Systamic) தொகுதி பங்கஸ் நாசினி [உ+ம் - டொப்சின் (Topsin)] விசிறி உலர விட்டு நடவும். மேற்கூறப்பட்ட செயல்முறைகள் மூலம் தண்டழுகல் நோயை ஒரு கட்டுப்பாட்டினுள் கொண்டு வரமுடியும். ☆

குடாநாட்டில் அதிகரிக்கும் தூவல் நீர்ப்பாசனம்

செ.பாலேந்திரன்
விவசாய ஆராய்ச்சி அலுவலர்

யாழ்ப்பாணத்தில் இன்று சகல விவசாயிகள் மத்தியிலும் ஆர்வமுடன பேசப்படும் தூவல், நீர்ப்பாசன முறையின் அனுகூலங்களாகும்.

மழைத்தூறல் போன்று செயற்கையாகக் குழிழ்கள் மூலம் பயிர்களுக்கு நீரைத்தூவுகின்ற - பாசனம் செய்கின்ற - ஒரு முறைதான் தூவல் நீர்ப்பாசன முறையாகும்.

விவசாயிகளின் இத்திட்டத்துக்கமைய உரியபொறிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக ஹட்டன் நஷனல் வங்கியும் இலகு கடன்களை விவசாயிகளுக்கு வழங்கிவருகின்றது. மானிய அடிப்படையில் விவசாயிகள் எவ்வித வேறுபாடுகளுமின்றிக் கடனைப்பெற்றுப் பயனடையக் கூடியதாக மேற்படி வங்கி செயற்பட்டுவருகின்றது.

குடாநாட்டிலே, விவசாயிகளின் நன்மை கருதி திருநெல்வேலியில் உள்ள விவசாயத்திணைக்களத்தினால ஏற்கனவே இந்தப் பாசனமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், தற்பொழுதுதான் விவசாயிகள் மத்தியில் இம்முறை பிரபல்யமடைந்து வருகின்றது.

அநுராதபுரத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் 'கிரிடெக்' என்னும் தனியார் நிறுவனம் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தூவல் நீர்ப்பாசனப் பொறிகளின சேவையைக் குடாநாட்டிலும் விஸ்தரித்துவருகின்றது. தென்னிலங்கையில் இம்முறை வெற்றியளித்து அதன பயனாக விவசாயிகள் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் இம்முறையை அறிமுகப்படுத்தி, அமுலாக்க விவசாயிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து அவர்களை வலுப்படுத்தி விவசாயத்துறைக்கு உரமூட்ட மேற்படி நிறுவனம் முன் வந்துள்ளது.

குடாநாட்டில் இப்புதிய நீர்ப்பாசன முறையையும் அதன் பயன்பாட்டையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் மேற்படி நிறுவனம் இணுவிலில் ஒரு கிளையை அமைத்துச் செயற்பட்டுவருகின்றது.

"கிரிடெக்" நிறுவனத்தின் இணுவில் கிளையின் பொறுப்பதிகாரி தூவல் நீர்ப்பாசன பொறிகளைத் திடமிட்டு அமைத்துக் கொடுப்பதில் வல்லவருமான எஸ்.தயாபரனுடன் இம்முறைபற்றிக் கலந்துரையாடிய போது பல பயனுள்ள தகவல்களைப் பெறமுடிந்தது.

பாத்தி நீர்ப்பாசனமும் தூவல் நீர்ப்பாசனமும்

தென்னிலங்கை விவசாயிகளுக்கு இருக்கும் நீர்ப்பாசன வாய்ப்புகளும் வசதிகளும் குடாநாட்டு விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. தென்னிலங்கையில் வளமான - வற்றாத - ஆறுகள், குளங்கள் மூலம் எக்காலத்திலும் பாசனம் செய்யக்கூடியதாக உள்ளது. ஆனால, இங்கு அப்படியான வசதிகள் இல்லை. நிலத்தடியில் உள்ள இயற்கையான நீரைச் சக்திகொண்டு உறிஞ்சி வெளியேற்றியே பாசனம்செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது.

எமது மூதாதையர் காலந்தொடக்கம் இன்றுவரை எமது பிரதேசதது விவசாயிகள் பாத்திகள் அமைத்து, வாய்க்கால்கள் கீறி, நீர்ப்பாசனம் செய்து வருகிறார்கள். இவ்வகையான நீர்ப்பாசன முறையினால் ஏற்படும் இழப்புக்கள், அதிகரித்த செலவு, நேரச் செலவு என்பனவற்றைக் குறைத்துப் பயிர்ச்செய்கைமூலம் பல நன்மைகளைப பெறக்கூடியதாக தூவல் நீர்ப்பாசன முறை அமைந்துள்ளது.

தூவல் நீர்ப்பாசன முறையின் பயன்பாடு

நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு நிலத்தடி நீரை உறிஞ்சி நீர்ப்பாசனம் செய்வதனால் அதிகளவிலான நீர் வீணாகின்றது. பயிர்களுக்குத் தேவைக்கு அதிகமான நீரைப் பாய்ச்சி நிலத்தடி நீர் விரயமாவதைப் பற்றியோ அதன் விளைவுகளைப் பற்றியே விவசாயிகள் சிந்திப்பதில்லை; கவலைப்படுவதுமில்லை.

விவசாயிகளுக்கு இவைபற்றிப் போதிய விளக்கமின்மையாலும் தவறான பல விவசாய நடவடிக்கைகளினாலும் அதிகளவு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

தேவைக்கு அதிகமான நீரையும், உரத்தையும் பயிர்களுக்கு இடுவதன மூலம் மண்ணின் வளம் பாதிப்படைகின்றது. மேலதிக உரம் நீருடன் கரைந்து கீழ் இறங்கி நிலத்தடி நீரைச சென்றடைந்து அந்நீரை மாசுபடுத்துகின்றது; நீரை உவர்த்தன்மை கொளளச் செய்கிறது; நீரை நஞ்சடையவும வைக்கிறது.

பயிர்கள் தம்மால் கிரகிக்கக் கூடிய நீர், உரம் போன்றவற்றை மட்டுமே உள்வாங்குகின்றன. மேலதிக நீரும், உரமும் கீழே செலகின்றன.

பாத்திமுறை நீர்ப்பாசனத்தினால் பாத்திகள், வாய்க்கால்களில் பயிர்கள் வளரமுடியாது நிலம் வீணாகின்றது. பாத்திகளில் நிறைவாக நீரையும உரத்தையும் இடுவதன்மூலம் வீண் செலவுகளும் ஏற்படுகின்றன.

குறைந்த நிலத்தில் கூடிய செய்கை

குறைந்தளவு நிலப்பரப்பில் கூடிய அளவு பயிர்ச் செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ளத் தூவல் நீர்ப்பாசன முறை உதவுகின்றது.

குழாய்கள் மூலமாக வரும் நீர் சுழலிகள் மூலமாகப் பயிர்களுக்கு விசிறப்படுகின்றது. பாத்தி முறையில நீர்பாய்ச்சும் வாய்க்கால்களில் எல்லாம் பயிர்கள் வளர்கின்றன. நிலம் வீணாகமாட்டா, சுழலிகளினால் பாய்ச்சப்படும் நீர் பயிரின் மேற்பரப்பிலிருந்து நி த்துக்கு விழுகின்றது. மேல இருந்து கீழ்நோக்கி மழைத்தூறல் போன்று நீர்பாய்ச்சப்படுவதால் வெங்காயம், லீக்ஸ் போன்ற பயிர்களில் படியும் பனிநீரானது பயிரிலிருந்து கழுவப்பட்டு நிலத்தைச் சென்றடைகின்றது. பயிர்களின் நுனியில் காணப்படும் பனிப்பூச்சிகளும் கரைக்கப்பட்டுவிடும். பனிமூலம் பயிருக்கு ஏற்படும் நுனிகருகுதல், முளைகருகுதல் போன்ற பாதிப்புக்களும் ஏற்படமாட்டாது.

நீருடன் கலந்து இரசாயன உரம், கிருமிநாசினி, ஏணைய மருந்து வகைகளையும் கலந்து பயிர்களுக்கு விசிறக் கூடியதாக இருக்கும். இதனால் அவை சகல பயிர்களுக்கும் சம அளவில் சென்றடையக் கூடியதாகவும் இருக்கும்.

செலவுச் சிக்கனம்

ஒரேநேரத்தில் பலபரப்பு நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யமுடிகின்றது. இதனால், நீர்ப்பாசனத்துக்காகச் செலவிடும் நேரம் குறைவடைகிறது. பாத்திகட்டக் கூலியாள்கள் தேவையில்லை. வேலையாளகளுக்கான செலவு மீதப்படும். குழாய்களின் திருகிகளைத் திருகி நீரை ஓடவிட்டு விடடால் போதுமானது. விவசாயி நீர்ப்பாசனத்தைத் தொடக்கிவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடக்கூடியதாக இருகக்கும் பாத்தி நீர்ப்பாசனம் மூலம் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக செலவிடும் நேரத்தை தூவல் நீர்ப்பாசனம மூலம் 20 நிமிடங்களில் மேற்கொள்ள முடியும்.

பாசனப் பொறிகளை அமைத்தல்

குடாநாட்டில் கைதடி, வடமராட்சி, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, மானிப்பாய், இணுவில், அளவெட்டி போன்ற பல இடங்களில் வெங்காயம், கோவா, கறிமிளகாய், பொன்னாங்காணி, வல்லாரை, போஞ்சி, லீக்ஸ் போன்ற பயிர்களுக்கு இம்முறையிலான நீர்ப்பாசனக் கருவிகளை 'கிரிடெக் நிறுவனம்' பூட்டியுள்ளது. விவசாயிகள் வைத்திருக்கும் நீர் இறைக்கும் கருவிகளுக்கேற்ப இம்முறையை அமைத்துக் கொள்ள முடியும்.

சிறிய இடங்களுக்கு PVC குழாய்களும் பெரிய இடங்களுக்கு HDPE குழாய்களும் பொருத்தப்படுகின்றன. இரண்டு பரப்புக் காணிக்கு 15 தூவல் கருவிகளும், ஓர் ஏக்கருக்கு 120 கருவிகளும் பொருத்தினால் போதுமானது. 'றொபின்' நீர் இறைக்கும் இயந்திரக் கருவிக்கு 15 தூவல் பூ பூட்டலாம். பெரிய இடங்களுக்குப் பகுதி பகுதியாகப் பயிர்களை நனைப்பதற்கு வசதியாகத் திருகுகளை மாற்றி நனையவிடலாம்.

பயிர்க்குழாய்கள் யாவும் நிலத்துக்கு மேற்பரப்பில் வருகின்றபடியால் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும் முன்னதாகவே குழாய்களைப் பொருத்திக்கொள்ள வேண்டும். இவற்றைப் பொருத்துவதற்கான செலவும் மிகக்குறைவு. ஒரு பரப்புக் காணிக்கு இப் பொறிகளைப் பூட்டிக் கொள்ள ஐயாயிரம் ரூபாவரையில் செலவாகின்றது. ❐

வி.பி.சர்மா
வலி.தெற்கு செய்தியாளர்

கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

கட்டுரைப்போட்டி

வலி.தென்மேற்கு,பெப்.23

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சண்டிலிப் பாய் கல்விக்கோட்டப் பிரிவு மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி நாளைமறுதினம் வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(எ-135)

கூட்டமைப்பு தேசியப் பட்டியல் எம்.பி. இம்முறை அம்பாறைக்கே வேண்டும்

"தமிழ் கூட்டமைப்பிற்கு இம்முறை கிடைக்கவிருக்கும் தேசியப் பட்டியல எம்.பி.பதவியை அம்பாறை மாவட்டதிற்கே வழங்கவேண்டும்." இவ்வாறு கோரும் தீர்மானமொன்றை அம்பாறை மாவட்ட தமிழ் மகா சங்கம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் கே.சுப்பிரமணியம் தலைமையில் ஆலையடி வேம்பில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட தமிழ் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.அரியநாயகம் சந்திரநேரு சிறப்பதிதியாகக் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

' கடந்த இரு தசாப்த காலமாக இழுத்தடிக்கப்பட்டுவரும் கல்முனை (தமிழ்) பிரதேச செயலக அங்கீகாரம் உடனடியாக வழங்கப்படவேண்டும்.

' காரைதீவு மற்றும் நாவிதன் வெளிப்பிரதேச செயலகங்களுக்குரிய பிரதேசசபைகள் உடனடியாக வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

' எதிர்வரும் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பிற்கு பூரண ஆதரவை அளித்தல்.

' சமாதான விரோதிகளுக் கெதிராகச்செயற்படுதல்.

கூட்டுறவாளருக்கு சம்பள உயர்வு

வலி.தென்மேற்கு,பெப்.24

பண்டத்தரிப்பு பல.நோ.கூட்டுறவுச் சங்க நிர்வாகம் சங்கப்பணியாளர்களுக்கு ஆயிரத்து 250ரூபா சம்பள உயர்வை வழங்குவது என்று தீர்மானித்துள்ளது.

இம்மாத சம்பளத்தில் கடந்த ஜனவரி மாதத்திற்கான நிலுவையையும் சேர்த்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது என பொது முகாமையாளர் சு.வைரவநாதர் தெரிவித்தார்.

(எ-135)

படையினர் அனுமதி

கொழும்புத்துறை,பெப்.24

கொழும்புத்துறைப் பகுதி தும்புத்தொழிலாளர்கள் 3ஆம் குறுக்கு வீதியிலுள்ள காவலரண் பாதையூடாக கடலுக்குச்சென்று தும்பு மட்டைகளை எடுத்துவர கடந்த வெள்ளி முதல் படையினர் அனுமதித்துள்ளனர்.

இப்பாதையூடாக தமது தொழிற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறுகோரி இப்பகுதி தொழிலாளர்கள் கடந்த வாரம் இராணுவ காவலரண் முன்பாக போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

(எ-30)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கவினுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(சி-33073)(13-39-32) (குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

31ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி ச.கதிரவேலு அவர்களின் மூத்த சகோதரி
அமரர் Dr. திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம்
அவர்களின் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/நவாலி மகாவித்தியாலயம்.

(28802)(13-39-32)

கண்ணீரில் கரைந்துபோன முதலாம் வருட நினைவலைகள்

மனம் மகிழ 12 - 05 - 1981

மனம் நெகிழ 07 - 03 - 2003

அமரர்

மோகனப்பிரதீபன் செல்லத்துரை

திதி: 24.02.2004 சதுர்த்தி

அன்புச் செல்வமே!

நல்லதோர் மகனாய் அண்ணனாய் மருமகனாய் - பேரனாய்
எம்மருகில் இருப்பாயெனக் காத்திருந்தோம்
தீராத நோயொன்று உனைத் தீண்டிக் கொண்டு
மாறாத சோகத்தை நாம் சுமந்து நிற்கின்றோம்
நீ உதிர்த்த வாசகங்கள் சிந்திய சிரிப்பொலிகள் - எம்
நெஞ்சைவிட்டு இடம்பெயர மறுக்குதடா
ஈரவிழிகள் காயவும்தான் மறுக்குதடா
உனைப் பிரிந்து ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம்நெஞ்சம்; தீராது இத்துன்பம்!

உன் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பெற்றோர், சகோதரன்,
மாமன்மார்: விவேகானந்தன் குடும்பம் (U.S.A),
விபுலானந்தன் குடும்பம் (கனடா).
உற்றார், உறவினர், நண்பர்கள்.

12, பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

(28692)(34-14-32)

4ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 20 - 02 - 1975

வீரச்சாவு 09 - 03 - 2000



மேஜர் இளங்கோவன் /இலங்கேஸ்
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி
(கிருஷ்ணசாமி வசீகரலிங்கம்)
(இடைக்காடு, அச்சுவேலி)

திதி:24.02.2004

அதிர வெடித்த துப்பாக்கி - எதிரி
உயிரைக் குடித்தது - இளங்கோ
உதிரம் சொரிந்த களங்கள்
எங்கும் வெற்றி குவிந்தது
சாள்ஸ் அன்ரனியில் நீ பதித்த
தடங்கள் என்றும் வாழும்
சந்ததிக்காய் உன் வீழ்வு
சரித்திரமாய் மாறும்- வீரனே
உன்னை நினைவுகளால் கட்டிய- எங்கள்
நெஞ்சறைகள் வேகுதடா
உந்தன் கல்லறையில் பூக்கள்- தினம்
கண்ணீரால் மலருதடா!

இடைக்காடு, அச்சுவேலி. - குடும்பத்தினர்.

(28707)(38-13-39-32)

நீங்கா நினைவில் மூன்றாண்டு

திருமதி சின்னையா சின்னம்மா

மண்ணுலகில் 05 - 05 - 1925

விண்ணுலகில் 24 - 02 - 2001

மதிகொண்டு வாழ்ந்திடினும் விதிதனை வென்றிடுமா
வையத்துள் வாழ்விங்கு நிலைபெறுமா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அம்மா உங்கள் நினைவுகள் அழியாது

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு,
கன்னாகம்.

இராசரத்தினம்
(மகன்)

(28777)(13-39-32)

கூரை அமைப்பில் புதிய அலை
அன்டன் சுபர் ஷெல்ட்டா
குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை

அன்டன் சுபர் ஷெல்ட்டா
- 2.5 மிமீ. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- துரு பிடிக்காதது
- சகாதார இடையறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

* நீடித்த பாவனைக்குப் பொருந்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள்.
* இதனை விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ள மறவாதீர்கள்.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ரூஸ்பிங் (பிறைவேட்) லிமிட்டெட்
516, ஜீ. சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5 ஃபெக்ஸ். 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி தேர்தல் நடத்துகிறார். நாட்டில் இப்படி அடிக்கடி தேர்தல் நடைபெறுவதைபியாட்டி அவரை வாசகன் ரட்ணதுரை ஒரு பேட்டி (கற்பனையில்) கண்டார். அதன் விவரம் இங்கே தரப்படுகிறது.

தேர்தல் நடத்துவது என் பொழுது போக்கு!

நிருபர்: (சிங்களத்தில்) ஆயு போவன் மேடம்!

சந்திரிகா: (தமிழில்) வணக்கம் வாங்க!

நிருபர்: அட மேடம் நீங்க நன்றாகவே தமிழில் பேசுகிறீர்கள்...

சந்திரிகா: நான் பொங்கல் விழாவின் போது ரி.வியில் தமிழில் பேசினேனே கவனித்தீர்களா?

நிருபர்: ஆமாம் மேடம் நன்றாக விருந்தது.

சந்திரிகா: தேர்தலின்போதும் அப்படி ஏதும் பேச விருப்பம். என்ன சொல்லலாம்.

நிருபர்: தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் வாழ்வு கொடுக்கப் போவதாகக் கூறுங்கள்.

சந்திரிகா: எப்படி? (தமிழில்) தமிலிக்கும் தமிள்களுக்கும் வால்வு கொடுப்பேன்.

நிருபர்: (மெதுவாக) ஆமாம் நீங்கள் வாழ்வு கொடுக்கமாட்டீர்கள் வால்வு தான் கொடுப்பீர்கள். வெரிகுட் மேடம்! தமிழர்களுக்கு வாழ்வு கொடுப்பதென்றால் நிவாரணம் கொடுக்கவேண்டும். உலக நாடுகள் கொடுக்கும் நிதியை வடக்கு - கிழக்கிற்குக் கொடுக்க ஜே.வி.பி. சம்மதிக்கும் என்று நம்புகிறீர்களா?

சந்திரிகா: இப்போது தேர்தல் நடக்கவுள்ளதே. அரசாங்கத்திடம் இதற்குப் பணம் இல்லை. இதற்கு நிதி எங்கிருந்து கிடைக்கும்?

நிருபர்: அதுதானே மேடம்?

சந்திரிகா: உலக நாடுகள் சமாதான நடவடிக்கைக்கான நிதி கொடுக்கவுள்ளனவே அதிலே இருந்து எடுத்துக்கொள்ளலாம்.

நிருபர்: அடஅட நல்ல ஐடியா?

சந்திரிகா: ஆனாலும் பாருங்கள் அந்த உலகநாடுகள் கொடுக்கும் நிதியை நாம் வடக்கு - கிழக்கிற்கும் செலவழிப்போம் - அதாவது வடக்கு கிழக்கிற்கும் தேர்தல் நடக்கிறதே அதனால் சொல்கிறேன்.

நிருபர்: ஆனால் குண்டுகள் போடும் போது மட்டும் வடக்கு - கிழக்கிற்கு போடுகிறீர்களே?

சந்திரிகா: அது தவறு?

நிருபர்: எது உங்கள் விமானப் படையினர் தவறாகக் குண்டுபோட்டதோ?

சந்திரிகா: இல்லை எனது ஆட்சியில் தமிழர்கள் அதிகம் பாதிக்கப்பட்டதாகக் கூறுவது?

நிருபர்: உங்கள் ஆட்சிக்காலத்தில்தான் அதிக அழிவுகள் ஏற்பட்டதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனரே?

சந்திரிகா: இது தவறான பிரசாரம். உலக நாடுகள் எப்படியும் வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்யும் என்று எனக்குத் தெரியும். ஒரு கட்டடத்தைப் புதிதாகப் பெரிதாகக் கட்ட வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் பழைய கட்டடத்தை இடித்து விட்டுத்தானே கட்டவேண்டும். அதனால்தான் நான் எல்லாவற்றையும் குண்டுபோட்டு இடித்தேன். இனி புதிதாகக் கட்டவேண்டியதுதான் பாக்கி. எனது நல்லமனதை ஈ.பி.டி.பி. புரிந்து கொண்டதுபோல் ஏன்தான் இவர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றார்களோ தெரியவில்லை.

நிருபர்: உங்களுக்கு இவ்வளவு நல்லமனது உள்ளதை எனக்கே இன்று தான் மேடம் தெரிகிறது. இல்லாவிட்டால் நீங்கள் எங்கள் பத்திரிகைக்கு பேட்டி கொடுக்க முன்வந்திருப்பீர்களா? அதற்கு நன்றி மேடம்.

சந்திரிகா: நாங்கள் தமிழர்களுக்குப் பேட்டிகொடுப்பதற்கு எதிரானவர்கள் அல்லர். நாங்கள் விடுதலைப் புலிகளின் பத்திரிகைக்கு மட்டுமல்ல எல்லாத் தமிழ் கட்சிகளின் பத்திரிகைகளையும் அழைத்துப் பேட்டிகொடுக்கவேண்டும் என்பதே - எங்கள் புதிய ஜேவிபி. - சுதந்திரக் கட்சி கூட்டமைப்பின் யாப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது.

நிருபர்: ஆனால் வேறு கட்சிகளின் பத்திரிகைகள் என்று எதைச் சொல்கிறீர்கள். தமிழ்க் கூட்டமைப்பினர், விடுதலைப் புலிகளின் பத்திரிகைக்கு மட்டும் பேட்டிகொடுத்தால் போதும் என்று சொல்வார்களே?

சந்திரிகா: அதைப் பற்றிப் பரவாயில்லை. ஆனால், டக்ளஸ் தேவானந்தாவின் பத்திரிகை உள்ளதே?

நிருபர்: அவர் முன்னர் உங்களைக் கொலை செய்ய முயற்சிப்பதாக பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் கூறியிருந்தீர்களே?

சந்திரிகா: அவர் மட்டுமென்ன? இப்போது எனது மெய்ப்பாதுகாவலராக இருக்கும் கருணாரட்ண கூடத்தான் பரேமதாச ஆட்சிக்காலத்தில் என்னைக் கொலைச்செய்ய முயன்றார். இப்போது அவரே எனது மெய்ப்பாதுகாவலராக இருக்கிறாரே?

நிருபர்: சரி மேடம். அரசியல் கேள்விகளுக்கு வருமுன் உங்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த கேள்வி? உங்கள் பொழுதுபோக்கு என்ன?

சந்திரிகா: தேர்தல் நடத்துவது... ஜனாதிபதித் தேர்தலைத் தவிர மற்றைய தேர்தல்களை நடத்துவது எனது பொழுதுபோக்கு.

நிருபர்: உங்கள் வாழ்க்கையில் அல்லது அரசியலில் ஏதாவது சாதனை செய்ததாக நினைக்கின்றீர்களா?

சந்திரிகா: கவனித்திருப்பீர்கள்! கடந்த 4 வருடங்களில் இலங்கையில் 3 தேர்தல்களை நான் நடத்தி விட்டேன். அது ஒரு சாதனைதானே!

நிருபர்: தேர்தல் நடத்துவதில் உலக சாதனை நிலைநாட்டவேண்டும் என்று நினைக்கிறீர்களோ?

சந்திரிகா: அப்படியொரு சாதனை என்னால் செய்யமுடியும். ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் - தான் உருவாக்கிய அரசியல் சட்டத்தில் அதற்கு இடமில்லாமல் சதி செய்துவிட்டார்.

நிருபர்: அதெப்படி மேடம்?

சந்திரிகா: ஒரு நாடாளுமன்றம் அமைத்தால் அதனை ஒருவருடத்திற்குக் கலைக்கமுடியாது என்று சட்டமுள்ளதே? இல்லாவிட்டால் இவ்வளவுக்குள் 5 தேர்தல்களை நான் நடத்தியிருப்பேனே.

நிருபர்: (மெதுவாக) வாழ்க ஜே.ஆர். ஆ... உங்களது பலவீனம் என்ன மேடம்?

சந்திரிகா: ஞாபக மறதி... பல தடவைகளில் நிகழ்ச்சிகளை மறந்து விட்டு பிந்திப் போவேன். யாராவது வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்திக்க வரச்சொல்லிவிட்டு மறந்துபோய் பியூட்டிபாலர் போய்விடுவேன்.

நிருபர்: ஞாபக மறதி அரசியலில் நல்லதுதானே மேடம். அரசியலில் பழைய எதிரிகளை மறக்கவும்? புதிய நண்பர்களைப் பகைக்கவும் அது உதவுமே மேடம்?

சந்திரிகா: உண்மைதான் இல்லாவிட்டால் எனது கணவரைக் கொன்ற ஜே.வி.பியுடன் எப்படி என்னால் கூட்டு வைக்க முடிகின்றது. இருந்தாலும், எனக்குப் பயம்...

நிருபர்: என்ன ஜே.வி.பிக்கோ?

சந்திரிகா: இல்லை... எனது ஞாபக மறதிக்கு?

நிருபர்: ஏன் மேடம்?

சந்திரிகா: தற்செயலாக மறந்து போய் தேர்தல்களை அடிக்கடி நடத்துற குசியிலை ஜனாதிபதித் தேர்தலையும் அறிவித்துப்போடுவேனோ என்று பயம்... இருந்தாலும், சமாளிக்கலாம். குமார் பொன்னம்பலத்தின் செத்தவீட்டுக்கு அஞ்சலிக் கடிதத்தை பழைய திகதியில் அனுப்பியது போல் - இதையும் கம்பியூட்டரிலை இருந்து செயலாளர் தவறுதலாக பழைய திகதியுடன் வர்த்தமானிப் பிரசுரத்திற்கு அனுப்பிப்போட்டார் என்று சொல்லலாம்...

நிருபர்: இப்போது திடீரென்று நாடாளுமன்றத் தேர்தல் நடத்த என்ன காரணம் என்று மக்கள் கேட்டால் என்ன சொல்வீர்கள்?

சந்திரிகா: அதுதான் நானும் கதிர் காமரும் அறிக்கை மூலம் சொல்லிவிட்டோமே?

நிருபர்: என்னவென்று?

சந்திரிகா: இப்போது நாட்டில் இருக்கும் ஸ்திரமற்ற நிலையால், அதிகாரக் குழப்ப நிலையால் சமாதான நடவடிக்கைகள் குழப்பமடையக்கூடாது. அதனால் தேர்தலை நடத்தி ஒரு ஸ்திரமான நிலையை உருவாக்குவதற்கு நான் தேர்தலை நடத்துகிறேன்.

நிருபர்: எனக்குப் புரியவில்லை மேடம். ஸ்திரமற்ற நிலை எப்படி உருவானது.?

சந்திரிகா: அதுதான் ரணில் சொல்லுவதைப்போல் - நான் 3 அமைச்சுப் பொறுப்புக்களையும் பறித்தவுடன் அந்த ஸ்திரமற்றநிலை - சமாதான நடவடிக்கையில் ஒரு தழம்பல் நிலை வந்து விட்டதாக..

நிருபர்: அடடா! நீங்கள் 3 அமைச்சுக்களையும் பறித்ததால் ஏற்பட்ட அதிகார ஸ்திரமற்ற நிலையைப்போக்க நீங்கள் நாடாளுமன்றத்தையே அவரிடமிருந்து பறித்து விட்டீர்கள் அப்படியா?

சந்திரிகா: இனித் தேர்தல் நடந்தால் மக்கள் ஒருவருக்கு ஆணை கொடுப்பார்கள் அப்போது அந்த ஸ்திரமற்றநிலை மாறிவிடும்.

நிருபர்: மக்கள் மீண்டும் யானைக்கு ஆணை கொடுத்தால்?

சந்திரிகா: (முறாய்த்துப் பார்க்கிறார்)

நிருபர்: இல்லை மேடம்! மக்கள் உங்கள் நல்ல மனதைப் புரிந்து கொள்ளாமல், மீண்டும் ரணிலுக்கு ஆணை கொடுத்தால்...

சந்திரிகா: பரவாயில்லை. ஜனாதிபதியாகிய என்னிடம்தான் சர்வ நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கிறதே. தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சை நான்தானே வைத்திருக்கப் போகிறேன்.

நிருபர்: அப்படியென்றால் மீண்டும் அரசியல் ஸ்திரமற்ற நிலை தோன்றும் என்கிறீர்கள்.

சந்திரிகா: ஆமாம்! அதை இல்லாமல் செய்வதற்காக மீண்டும் தேர்தலை நடத்துவேன். தண்ணிட தண்ணிட நான் குடிக்கிற தண்ணியைச் சொல்லவில்லை. செய்தியாளர் மயங்கி விழுந்திட்டார். அவரை எழுப்பத் தண்ணீர் கொண்டா!

சந்திரிகா: என்ன இப்படிப் பயந்திட்டீர்?

நிருபர்: இல்லை மேடம் உங்கள் அரசியல் சாணக்கியத்தை பார்த்து மயங்கிப் போனேன். (செய்தியாளர் எழுந்து சுதாகரித்துக் கொள்கிறார்...) தேர்தலில் வெற்றிபெறுவீர்கள்... தேர்தல் முடிந்ததும் உங்களின் முதல் கடமை என்னவாகவிருக்கும்?

சந்திரிகா: இந்தியாவிற்குப் போவேன்.

நிருபர்: எதற்கு?

சந்திரிகா: இந்தியாவிற்குப் போய நான் முதலில் என்ன செய்யவேண்டும் என்று வாஜ்பாயைக் கேட்பேன். அவர்கள் பேச்சுவார்த்தைகளைத் தொடரச் சொல்வார்கள். அதனால் உடனடியாக நோர்வேயை அழைப்பேன்

நிருபர்: ஓ! அப்ப உடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பீர்கள் என்று சொல்கிறீர்களா?

சந்திரிகா: நீர் என்ன செய்தியாளர்...? இன்னும் அரசியல் புரியாமல் இருக்கிறீர். இந்தியா பேச்சுக்களை நடத்தச் சொல்வது ரணிலோடை. புலிகளோடை இல்லை. எனக்கும் ரணிலுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்கத்தான் நோர்வேயின் அனுசரணை தேவை. புலிகளோடை பேச நோர்வே தேவையில்லை. அதை ஜே.வி.பி. விரும்பாது.

நிருபர்: ஜே.வி.பி. என்கிறபோது தான் ஞாபகம் வருகின்றது... நீங்கள் எந்த நேரமும் மேக்கப் போடுவதிலேயே காலத்தைக் கழிப்பதாக முன்னர் ஜே.வி.பி. தலைவர் ஒரு தடவை குறையாகச் சொல்லியிருந்தாரே மேடம்?

சந்திரிகா: அதில் தப்பில்லை. அரசியலில் உள்ளவர்களுக்கு நன்றாக நடிக்கத் தெரியவேண்டும். அதனைத் தான் அவர்கள் அப்படிச் சொன்னார்கள். இப்பபாருங்கள் நான் ஜே.வி.பியைப் பார்த்து புலிகளை அழிக்க வேண்டும் என்று பத்திரகாளி மாதிரிச சொல்வேன்.

மறுவினாடியே அந்த மேக்கப்பைக் கலைத்துப் போட்டு விட்டு புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்று மக்களைப் பார்த்து வெள்ளைப் புறாவாய்ச் சொலவேன்.

நிருபர்: அதுசரி... நீங்கள் பெரிய நடிகைதான். ஆனால், நானும் ரணிலும் பெரிய நடிகர்கள் என்று சொல்லியிருந்தீர்களே மேடம்?

சந்திரிகா: ஆமாம்... நானும் ரணிலும் பாலிய வயதுச் சிநேகிதர்கள். நாங்கள் நல்ல நண்பர்கள். ஆனால், அரசியலில் சண்டை போடுவோம். அதைத் தான் அப்படிச் சொல்லியிருந்தேன்.

நிருபர்: உண்மைதான் ரணில் கூட உங்கள் பாலிய வயது விளையாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார். ஆனால் அப்போது சிறுவயதில் விளையாடும் போது மட்டுமல்ல இப்போதும் உங்களுக்கு கணக்குப்பார்க்கத் தெரியாது என்று கூறியுள்ளாரே?

சந்திரிகா: அதுதான் அவருக்குக் ஒரு கணக்குக் கொடுத்துள்ளேனே? இன்னும் அவர் அதற்கு விடை கண்டு பிடிக்கவில்லையே?

நிருபர்: அது என்ன கணக்கு மேடம்?

சந்திரிகா: அதுதான் நான் 1997 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று சத்தியப்பிரமாணம் செய்கிறேன். ஆனால், எனது பதவிக் காலம் 2002இல் முடிகின்றது. ஆனாலும் நான் 2000ஆம் ஆண்டு தேர்தல் நடத்தி வெற்றிபெற்று சந்தியப் பிரமாணம் செய்கிறேன். ஆனால், இடையில் யாருக்கும் தெரியாமல் ஒரு சத்தியப்பிரமாணம் செய்தேன். இப்போது எப்போது எனது பதவிக் காலம் முடிகின்றது. அதுதான் கேள்வி? இதற்கு நிச்சயமாக ரணில் பதில் சொல்ல முடியாது.

நிருபர்: ஆனால், அதிலொரு சின்னச் சிக்கல் மேடம்.

சந்திரிகா: என்ன?

நிருபர்: இப்போ நடக்கப் போற தேர்தலில் ரணில் வெற்றிபெறுகின்றார் என்று வைப்போம்...

சந்திரிகா: (கோபத்துடன்) ஏன்ன?

நிருபர்: இல்லை ஒரு கதைக்கு அப்படி வைப்போம். இப்ப அவரின் அரசுக்காலம் இன்னும் நாலு வருடம் இருக்கிற நிலையில் தேர்தல் நடக்குது. அவர் தற்செயலாக வெற்றிபெற்று ஒரு தடவை பதவிப்பிரமாணம் செய்கிறார்.

அதேசமயம், தனது இப்போதைய பதவிக்காலம் முடிவுறுகின்ற நாலு வருடம் கழித்தும் - ஒரு சத்தியப்பிரமாணத்தை ரகசியமாய் குளியல் அறையில் செயகிறார் என்று வைத்தால் அவரின் பதவிக்காலம் எத்தனை வருடம் மேடம்? ஐயோ தண்ணீர் தண்ணீர்.. மேடம் மயங்கிப்போனா...!

"மாணவர்களின் கல்விக்குப் பெருந்துணை,
எனக்கும், எனது சேமிப்புக்கும் உறுதுணை!"

இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

அஷோக்க பண்டார சமரக்கோன்
ஆசிரியர்,
வேவல வெவ மஹா வித்தியாலயம்
வேவல, தம்புள்ளை

"நான் ஒரு பின் தங்கிய கிராமத்தில் ஆசிரியராகக் கடமை புரிகிறேன். தம்புள்ளையிலிருந்து பாடசாலைக்கு வருவதானால் ஏறக்குறைய ஒன்றரை முதல் இரண்டு மணித்தியாலங்கள் ஆகும். மணிக்கு ஒரு பஸ் தான் உள்ளதென்பதால் தினமும் கண்டி, வத்தேகமையிலிருந்து வேலைக்குச் செல்வதற்கு நான் பட்ட பாடு எனக்கு மட்டுமே தெரியும்.

ஆனால் இந்தத் தொல்லைகள் அனைத்தும் BOXER மோட்டார் சைக்கிளை வாங்கியதன் பின் மாயமாய் மறைந்து விட்டன. இப்பொழுதெல்லாம், பாடசாலைக்குத் தாமதமின்றி மிக எளிதில் போக முடிகிறது. BOXER மோட்டார் சைக்கிள் உள்ளதால் வார இறுதி நாட்களில் வீட்டு அலுவல்களை இலகுவில் முடித்துக் கொள்ளவும், வெளிப்பயணம் செல்லவும் வசதியாகவுள்ளது.

எமது பாடசாலை பின்தங்கிய கிராமப் பகுதியில் தான் அமைந்துள்ளது. BOXER மோட்டார் சைக்கிளின் டயிள் கிறேடில், செஸி மற்றும் ஷொக் அப்ஸோபர் என்பன இப் பாதைக்கு நன்கு பொருந்துகிறது. அதன் 35/35W முன்புற விளக்கின் கூடிய வெளிச்சம் இராப் பொழுதிலும் பாதுகாப்புடன் பயணிக்க ஏற்றது. BOXER மோட்டார் சைக்கிளை மிகச் சுலபமாக ஓட்டிச் செல்லலாம்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டடின் சேவை மற்றும் மேலதிக உதிரிப்பாக விற்பனை வலையமைப்பானது என்றும், என்னை நிழலாகத் தொடர்ந்து, துணைபுரிகிறது. என்னுடன் பணியாற்றும் ஆசிரியர்களும் BOXER மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகிறார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

BOXER CT Deluxe

DPMC

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600 தொலைநகல் : 4700677, 2687175
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050
இணைய தளம் : http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள் : நீர்கொழும்பு, யக்கலை, மத்துகமை, கண்டி, நுவரெலியா, மாத்தறை, அனுராதபுரம், தெஹியத்தக்கண்டிய, பதுளை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 04/01/3062

24-02-2004

அரசு – புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் திருத்தங்களும் மாற்றங்களும் செய்ய வேண்டும்

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.24

இரு தரப்பினரிடையேயும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியில் கண்காணிப்புக் குழுவுக்குப் போதிய வலுவை வழங்குவதற்காகப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்படவேண்டும். ஒப்பந்தத்தின் ஷரத்து 4(3) இன் பிரகாரம் சட்டப்படி இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்று முக்கியம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வரவேற்கப்பட வேண்டியது. ஆயினும், இரண்டு வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களையும் மற்றும் அகதிகளையும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமரச் செய்வதற்குப் படிப்படியான நடவடிக்கைகள் கூட எடுக்கப்படாமை கவலையளிப்பதாகவுள்ளது. அவர்களை விரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமரச் செய்வதால் அவர்கள் தன்னம்பிக்கை பெறுவார்கள். அழிவுற்ற மற்றும் சேதமடைந்த வீடுகள், கட்டடங்கள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டிடங்கள் போன்றவற்றை மீளமைப்பதற்குரிய கொடுப்பனவுகளை வழங்க வேண்டியது அரசின் கடமையாகும்.

இது உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான ஐ.நா. அமைப்பின் வழிகாட்டல் விதிகளுக்கமைவாக இருத்தல் வேண்டும். இலங்கை அரசமைப்பின் 14 (1) (H) ஷரத்தின் கீழ் தனிநபர் ஒருவரின் அடிப்படை உரிமைகள் பின்வருமாறு உறுதிப்படுத்தப்படுகின்றன.

"ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் சுதந்திரமாக நடமாடவும் தனது வாழ்விடத்தை இலங்கைக்குள் தெரிவு செய்யவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சமாதானத்துக்கான யுத்தம் என்ற கொள்கை மற்றும் ஆயுதக் குவிப்பு ஆகியவற்றுக்குப் பதிலாக சமாதானத்தை நிலை நிறுத்தவும் யுத்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்குமே கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கும் ஒரு நாடு. எதிர்காலத்தில் அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாணம் என்ற வகையிலேயே அது தனது நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த நிதி உதவிகள் பயன்படுத்தப்படுவதைக் கண்காணிக்க வேண்டும். சமாதான முயற்சிகளின் அடித்தளம் யுத்தநிறுத்த உடன்படிக்கையிலேயே தங்கியுள்ளது. வடக்கு - கிழக்கு மக்களுக்கான அவசர உதவிகள், மனிதநேய உதவிகள் மற்றும் குறுகியகால புனர்நிர்மாணச் செயற்பாடுகள் என்பவற்றுக்கு உதவுகின்ற மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி கையேற்றது துரதிர்ஷ்டவசமானது. புனர்நிர்மாணப் பணிகள் முடங்கிப் போனதால் சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துள்ளன. வரப்போகும் தேர்தல் முடிவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஆயுள் காலத்தைத் தீர்மானிப்பதாக அமையும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் 3ஆவது ஷரத்தின் கீழ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு சம்பவ இடத்துக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபடமுடியும். ஆயினும், வழிகாட்டுதலின்மையாலும் உடன்படிக்கையின் ஷரத்துக்களில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படாததாலும் கடமைகளை நிறைவேற்றுவதில் தோல்வி ஏற்பட்டுள்ளது.

உடன்படிக்கையில் படையினர் தனியாக இருக்க வேண்டுமெனவும் பொதுக் கட்டடங்கள் மீளளிக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏ-9 வீதியை மக்கள் போக்குவரத்துக்கு மீளத் திறப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தமை போன்று பயண நேரத்தை அதிகரித்துப் போக்குவரத்தை எளிதாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உடன்படிக்கையில் திருத்தங்களும் மாற்றங்களும் செய்யப்படவேண்டும்.

சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நிலை நிறுத்துவதற்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான அடிப்படையில் தீர்வு ஒன்று காணப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் நோர்வே அரசு மேற்கொண்ட திறமையான இராஜதந்திர அணுகுமுறைகளே உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணமாகும். அனுசரணையாளர்களாகவும் நடுவர்களாகவும் செயற்படும் நோர்வே அரசின் பங்கு சமாதான முயறசிகளைத் துரிதப்படுத்துவதில் உறுதுணையாக இருக்கும் - என்றுள்ளது.

மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-து-10)

யோகாசனக் கண்காட்சிகள்

வடமராட்சி,பெப்.24

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய மாணவர்களுக்கென யோகாசனக் கண்காட்சி இன்று 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி இந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

தும்பளை யோகசாந்தி நிலையத்தினர் இக்கண்காட்சியை நடத்துகின்றனர். (ம-173)

★ ★ ★

தும்பளை யோகசாந்தி நிலையத்தினால் மாணவர்களின் உடல், உள நலன் கருதி நடத்தப்பட்டுவரும் யோகாசனக் கண்காட்சித்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலயத்தில் அதிபர் திருமதி சரவீந்திரராஜா தலைமையில் யோகாசனக் கண்காட்சி நடைபெறவுள்ளது.(ம-10-ரி)

புதிய வாக்காளர்கள் 5 லட்சம் பேர்

ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் சுமார் 5 லட்சம் பேர் புதிதாக வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர் என்று இலங்கை தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின்படி மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 28லட்சத்து 99ஆயிரத்து 32பேர் ஆகும். இவர்களுள் 4லட்சத்து 70ஆயிரத்து 824 புதிய வாக்காளர்களும் அடங்குவர்.

இதேவேளை - தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெறுகின்ற வாக்கு வீதத்தின் அடிப்படையில் தேசியப் பட்டியலின் மூலம் 29 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ம-து-10)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். அதற்கு முன்பாக அவர்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சென்று அஞ்சலி செலுத்தினர். அங்கிருந்து தந்தை செல்வாவின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்திற்கு வந்த அவர்கள், அங்கும் மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலிகளை முடித்துக் கொண்டு யாழ். செயலகத்துக்குச் சென்ற அவர்கள், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். அஞ்சலி நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள் : தேவா)





மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு துணைமுதல்வர் திருவாட்டி விக்னேஸ்வரி குழந்தைவேலு தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வித்தியாலயத்தின் முன்னாள் பிரிவுத் தலைவர் திருவாட்டி மங்கையர்க்கரசி மகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.24

இருபாலை சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் தலைமையில் பாரதி கலாமன்ற சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் வை.தியாகராஜா கலந்துகொள்ளவுள்ளார். (எ-10)

★ ★ ★

வலிதென்.மேற்கு,பெப்.24

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி அதிபர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கலந்துகொள்வார். (எ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.24

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கும் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.24

வண்ணை நாவலர் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் ந.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா கலந்துகொள்ளவுள்ளார். (எ-10)

★ ★ ★

வலி.தென்மேற்கு,பெப்.24

பிரான்பற்று கலைமகள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக வடக்கு - கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் சு.மகாலிங்கம் கலந்துகொள்வார். (எ-135)

கணக்காளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை

தென்மராட்சி,பெப்.24

இலங்கை கணக்காளர் சேவையின வகுப்பு II தரம் IIஇற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 28, 29, மார்ச் 7 ஆம் திகதிகளில் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-10-117)

வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

ஊர்காவற்றுறை, பெப்.24

அனலைதீவு, எழுவைதீவுப் பிரதேசங்களில் வளர்ப்பு நாய்களுக்குத தடுப்பூசி ஏற்றும் பணி எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய தினங்கள் நடைபெறவுள்ளதாக அனலைதீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.ஜெய்கணேஸ் அறிவித்துள்ளார்.

வியாழக்கிழமை, எழுவைதீவுப் பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம், முருகன்கோயிலடி, மணிவாசகர் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வைத்து நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும்.

வெள்ளிக்கிழமை அனலைதீவுப் பிரதேசத்திலுள்ள அருணோதையா சனசமூக நிலையம், அனலைதீவு தெற்கு சனசமூக நிலையம், வடலூரா சனசமூக நிலையம், அனலைதீவு மத்திய சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வைத்து தடுப்பூசி போடப்படும்.

பொதுமக்கள் தமக்கு அண்மையில் உள்ள நிலையங்களில் சென்று தமது வளர்ப்பு நாய்களுக்குத் தவறாது தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (ம-16)

கோட்டமட்ட விளையாட்டு போட்டிகள்

வலி.தெற்கு,பெப்.24

உடுவில்கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளை புதன்கிழமையும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணிக்குப் போட்டிகள ஆரம்பமாகி நடைபெறும் எனவும் இப போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறும் வீரர்கள் வலய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர் எனவும் உடுவில் கல்விக்கோட்ட விளையாட்டுக்குழுச் செயலாளர் முநடராசா தெரிவித்துள்ளார்.

போட்டிகள் யாவும் உடுவில் கல்விக்கோட்டக் கல்விப் பொறுப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ம-10-152)

நிதி உதவிக்கு விண்ணப்பிக்கலாம்

எதிர்வரும் ஜுன் மாதம் சிங்கப்பூரில் இடம்பெறவுள்ள இளைஞர் சமாதான மாநாட்டில் பங்குபற்றும் மாணவர்களில் நிதி உதவி தேவைப்படுவோர் அதற்கான படிவங்களை சமாதானத்திற்கான குரல் அமைப்பின் யாழ். பிராந்திய நிலையம் அமைந்துள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்பதற்கான இறுதிநாள் எதிர்வரும் முதலாம் திகதியாகும். (ம)

அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் கேட்டுள்ளார். (எ-10)

ட்றைவர் தேவை

கொழும்பிலே சொந்தப் பாவனையில் உள்ள வான் ஒன்றை ஓட்டுவதற்கு ட்றைவர் தேவை. தங்குமிட வசதி, உணவு வசதி என்பன செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0717 323192.

(சி-32425)

தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அமெரிக்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

அமெரிக்காவின் நலம் பேணும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இருவர் நாளை புதன்கிழமை இலங்கை தமிழராசிரியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

நாளை காலை 11 மணிமுதல் 2 மணிவரை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும் இச் சந்திப்பில் யாழ். குடாநாட்டுப் பிரச்சினைகள் தொடர்பாகவும், மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாகவும். கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-6)

சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை

மேற்படி வர்த்தக சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் 28.02.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு (ப.நேரம்) சுன்னாகம் வர்த்தக சங்க அலுவலகத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.

அடிப்படை மாதச் சம்பளம் - ரூபா 4000/- இலிருந்து

நவீனசந்தை மேல்மாடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

(28778)(24-14-16) சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.

வட மாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம், கோண்டாவில்

முக்கிய அறிவித்தல்

02.02.2004இல் நடைபெற்ற வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கக் கூட்டத்தில் 1000 சுருட்டுகள் சுருட்டுவதற்கு 01.03.2004 தொடக்கம் 400/- ரூபா சம்பளம் வழங்குவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன், சங்க நடவடிக்கைகளுக்கு அமைய சங்கத்தில் பதிவு செய்யாத சகல சுருட்டுத் தயாரிப்பாளர்களும் சங்கத்தில் தங்களைப் பதிவு செய்யுமாறும் தவறும் பட்சத்தில் அது சங்க நடவடிக்கைகளுக்கு முரணான செயலாகக் கருதப்படும் என்றும் அறியத்தருகின்றோம். இச்செயலை சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

த. குணரட்ணம், செயலாளர். S.S.சச்சிதானந்தசிவம், தலைவர்.

வட மாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்.

(28835)(31-12-17)

Diploma in Hardware Engineering

- நீங்களே உங்கள் கணனியை அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சிநெறி.
- யாழ். மண்ணில் வித்தியாசமான முறையில் இப்பயிற்சிநெறி எம்மால் அறிமுகப்படுத்தப்படுகிறது. எவரும் கற்கலாம். கணனி பற்றிய முன்னறிவு தேவையில்லை.
- பயிற்சியை முடித்த இருபிரிவு மாணவர்களிடம் கேட்டறியுங்கள். ரஷ்ய கணனி பொறியியலாளரினால் தமிழிலேயே விரிவுரைகள் நடத்தப்படும்.
- ஒருபிரிவில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.
- பயிற்சிக் காலம் ஒரு மாதம். காலை, மாலை வகுப்புகள்.

※ Assembling ※ Fault Finding ※ Software Installation
※ Upgrading
※ Repairing ※ Configuring ※ Servicing ※ Networking
※ Trouble shooting மேலதிகமாக,
1. CD Writing 2. வேறு Program களை Install செய்தல்
3. Computer Assembling, Computer இன் தொழிற்பாடு போன்ற CD களை நீங்களே Copy செய்து பெற்றுக்கொள்ளலாம்.

புதிய பிரிவுகளுக்கான பயிற்சி ஆரம்பம்: 25-02-2004

NORTH LANKA
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

பிரதான வீதி, சங்கானை. (28838)(34-16-14-31)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கரணவாய் தெற்கைச் சேர்ந்தவரும், கரணவாய் முத்த விநாயகர் முன்னாள் தேர்திருப்பணிச் சபைத் தலைவரும், சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் முன்னாள் தலைவரும், பேரவையின் தற்போதைய உறுப்பினரும், கரணவாய் முதலைக்குளி முருகன் திருப்பணிச்சபைத் தலைவரும், கரணவாய் கலட்டி பிள்ளையார் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், உடுப்பிட்டி ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் தூதாவளைக் கிளையின் தலைவரும், சிறந்த சமூகத் தொண்டரும், 'லிங்கம்ஸ்' மணப்பந்தல் உரிமையாளருமான

திரு. சின்னத்துரை நாகலிங்கம்

அவர்கள் நேற்று (23.02.2004) திங்கட்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திரு **க.அரியநாயகம்** முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்டதையிட்டு, அவரைப் பாராட்டி அவரது சமூகப்பணி மேலும் சிறக்க வாழ்த்த' மனமகிழ்வடைகின்றோம்.

கரணவாய்,
கரவெட்டி.

(28834)(34-16-14-31) கரணவாய் நலன் விரும்பிகள்.

பருத்தித்துறை நகராட்சி மன்றம்

விசேட அறிவித்தல்

இந்நகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்த வீடுகளில், சிறுகைத்தொழில் ரீதியாக உணவுப்பதார்த்தங்கள், யூஸ் போன்றவற்றைத் தயாரித்துப் பொதிசெய்து விற்பனை மேற்கொள்பவர்கள் 27.02.2004ஆம் திகதிக்கு முன் இச்சபையின் உத்தரவுக் கட்டணம் செலுத்தி வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன். தவறின் அங்கீகாரமற்ற உணவுப் பதார்த்தங்களின் தயாரிப்பு எனக்கருதி எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி க. திருச்செல்வநாயகம்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை 20.02.2004 (சி-33427)(31-12-17)

கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்து வந்தவருமான

கோயிலார் ஆறுமுகம்

அவர்கள் 19.02.2004 அன்று மறைந்தசெய்தி கேட்டு மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் சேவைகள் நினைவுகூரப்படவேண்டியதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சி.வல்லிபுரம்
ஆனந்தசாமி மடத்தலைவர்,
செல்வச்சந்நிதி.

- சோ.சின்னத்துரை
முதலாம் வட்டாரம், நயினாதீவு.

(28843)(34-14)

பிரதேச விற்பனை அலுவலர்
(AREA SALES EXECUTIVE)

கொழும்பில் இயங்கும் முன்னணி நிறுவனத்திற்கு விற்பனைத் துறையில் அறிவு / அனுபவம் உள்ள 30 வயதிற்குட்பட்ட, கள வேலைகளில் (Field Work) ஆர்வமுள்ள ஆண்கள் பிரதேச விற்பனை அலுவலர் பதவிக்குத் தேவை.

தகைமை :
குறைந்தது (A/L), (B.Com., B.B.A. பட்டதாரிகளுக்கு முன்னுரிமை)

பிரதேசம் :-
யாழ்ப்பாணம், கிளிநொச்சி,
முல்லைத்தீவு, வவுனியா.

ஆர்வம் உடையோர் தங்கள் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

Personnal Officer
K.G.Industries
545, Sri Sangaraja Mw,
Colombo - 10.
Fax : 2421668.

(சி-33423)(30-16-14-31)

தவறிவிட்டது

பல்கலைக்கழகக் கொப்பிகளுடன் கூடிய புத்தகப்பை ஒன்று வல்லைவெளி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் ஒப்படைக்கவும் அல்லது கீழ்க்காணும T.P இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(28846)

☎ 077-6178733, 0777-252067 (37)

லக்சுமி இணுவில்

ஜோதிகா, ரம்பா, மைனா விவேக் நடித்த

ஸ்ரீநிவாசன்

(ரீல்ஸ்)

காட்சிநேரம் : 11.00, 2.30, 7.00 (பு.நே.)

(28811) (-32)

நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரசாந் நடித்த

ஜோடி

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

DUNGEONS DRAGONS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

(C-33434)(32-

ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந்த், வடிவேல், பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

பெண்களின் பெண்ணை

காட்சிநேரம் : 10.30, 2.30.6.30.9.30(பு.நே.) (ரீல்ஸ்)

(C-33050) (17-13-32)

லிபேட்டி அச்சுவேலி

விஜயகாந்த், சாக்ஷி, பிரகாஸ்ராஜ், மனோரமா நடித்த

வாஞ்சிநாதன்

(ரீல்ஸ்)

காட்சிகள்: 3.00, 7.00 (பு.நே.)

(C-33049)(17-13-

நாகம்ஸ் சுன்னாகம்

புதிய பொல்லி ஒளிநயத்துடன்

தனுஷ், அர்னா, கருணாஸ் (2 வேடம்) நடிப்பில்

புதுவசந்தம்

காட்சிநேரம் : 11.00,3.00,7.00. (பு.நே.) (ரீல்ஸ்)

(C-33435)(17-13-32)

இன்றைய நிகழ்வுகள்

சாவகச்சேரி,பெப்.24

தென்மராட்சி எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் கல்வயல் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த பொதுமக்களுக்கு பழமரக்கன்றுகள் இன்று வழங்கப்படவுள்ளன.

கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் ஆலயமுன்றிலில் வைத்து இன்று காலை 10மணிக்கு பழமரக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

(ஒ-4-31)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.24

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மெய்வன்மைப்போட்டிகள் இன்று பிற்பகல் 1.30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கோட்டகல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கலந்து கொள்வார்.

(ஒ-117)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.24

மிருசுவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையின் மெய்வன்மைப்போட்டிகள் இன்று பிற்பகல் 1.30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் ஆர்.எக்ஸ்.அன்ரன் தலைமையில் நடைபெறும்.

இதில் முதன்மைவிருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்வார். (ஒ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.24

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப்போட்டிகள் இன்று பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி தங்கராஜா கலந்து கொள்வார். (ஒ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.24

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய இலட்சார்ச்சனை விழா இன்று ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 13 நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி காலை தீர்த்த உற்சவமும் மாலை பூஜை, தீப பூஜை உற்சவமும் நிகழும்.

(ஒ-4-15-28)

உ

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான இலட்ச சங்காபிஷேகமும் இலட்ச அர்ச்சனையும்

அம்பிகை மெய்யடியார்களே!

அல்வாய், வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு மாசி மகா மகத்தை முன்னிட்டு இவ்வருடம் இலங்கையில் எங்கும் நடைபெறாத இலட்ச சங்காபிஷேகமும், இலட்ச அர்ச்சனையும் நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

நிகழும் சுபானு வருடம் மாசிமாதம் 12 ஆம் நாள் இன்று (24. 02. 2004) செவ்வாய்க்கிழமை தொடங்கி 22 ஆம் நாள் (05. 03. 2004) வெள்ளிக்கிழமை வரை 11 தினங்களிலும் ஒவ்வொரு நாளும் காலை 5. 00 மணி தொடக்கம் மாலை 2. 00 மணிவரை ஒன்பதாயிரம் (9000) சங்காபிஷேகமும் மாலை நவசக்தி அர்ச்சனையும் நடைபெறும். 11ஆம் நாள் நிறைவுபெறும். மறுநாள் (06. 03. 2004) சனிக்கிழமை காலை 6 மணியளவில் மகாமக சமுத்திர தீர்த்தம் நடைபெறும்.

அந்தணச் சிவாச்சாரியார் பெருந்தகைகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிப்பார்கள்.

கிரியைகள் அனைத்தும் –

ஆலய பிரதமகுரு :

சிவாகம கிரியாநிதி, கிரியா துரந்தரர், சத்யாகம வித்வஜோதி பிரம்மஸ்ரீ கி. சுரேஸ்வரக்குருக்கள் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

(சி-33428)(37-13-17-32) - ஆலய பரிபாலன சபை.

மரண அறிவித்தல்கள்

திருமதி தில்லையம்பலம் இந்திராணி

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் பலகாட்டை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் இந்திராணி 22.02.2004 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் தேவராசன் (வவுனியா), முத்தாச்சி ஆகியோரின் சகோதரியும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, செல்வநாயகம் (மல்லாவி), பரமேஸ்வரி ஆகியோரின் தாயாரும் தங்கராசா (K.P), சண்முகலிங்கம், கிருபைமலர், தில்லைநாதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2004) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டடி,
யாழ்ப்பாணம். (28850)(32-12-13)

தகவல்:-
சகோதரர்கள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தியோகு இராயப்பு (சின்னப்பு)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தியோகு இராயப்பு அவர்கள் நேற்று (23.02.2004) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியோகு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசேப்பு தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளையின் ஆசைக் கணவரும் காலஞ்சென்றவர்களான பெலவேந்திரன், விக்டோரியா, யோசேம்பு, மேரி, சிஸ்டர் மேரி, அலோசியஸ், ஆசீர்வாதம், செபஸ்ரியாம்பிள்ளை, திருமதி இசபெல்லா போல் (வவுனியா) ஆகியோரின் சகோதரனும் மேரி அஜ்னஸ் (சாவகச்சேரி), அஞ்சலா (ஹற்றன்), சாந்தி (கனடா), பீலிக்ஸ் (இத்தாலி), தேவிகா (இத்தாலி), அம்புறோஸ் (சுவிஸ்), பிபியா (கொழும்பு), அன்ரன் (இத்தாலி), லொறேற்றா (இத்தாலி), காமலீற்றா (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற ஸ்ரீபன் ஜோஜ், மெய்யநாதன் (ஹற்றன்), கண்ணதாஸ் (கனடா), கெங்கா (இத்தாலி), ரவீந்திரன் (இத்தாலி), தயா (சுவிஸ்), துரைச்செல்வம் (கொழும்பு), சமிலா (இத்தாலி), கிருஸ்ணகாந் (இத்தாலி), பேரழகன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் திருமதி சுபோதினி ஜனகன் (கனடா), தர்ஷினி, யூட்சன், பார்த்தீபன், ஷைனுகா, அருண், டெல்சிகா, மிதுனா, மிதோஷன், ஸ்ரெனிலா, ஸ்ரெவின், ஸ்ரீகான், தனுஷிகா, சுஜீவன், சாருங்கா, டாரிகா, பிரீத்திகா, பிரியந்திகா, பிருந்தா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நல்லடக்கச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சண்முகம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (C-33433)(40-13-12-32)

தகவல்:-
R.பீலிக்ஸ், R.அம்புறோஸ்,
R.அன்ரன்.

அரியகுட்டி நவரட்ணம்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த அரியகுட்டி நவரட்ணம் (முன்னாள் ஊழியர், ஸ்ரீலங்கா ரெலிக்கொம்) அவர்கள் நேற்று (23-02-2004) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற அரியகுட்டி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், சித்திராதேவியின் அன்புக் கணவரும் சுஜிதாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், இராசேந்திரன் மற்றும் இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, சறோயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபத்திராதேவி (ஆஸ்திரேலியா), கமலாதேவி (ஜேர்மனி), செல்லம்மா, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், கதிரவேலு, விமலநாதன் மற்றும் பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா), லோகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் லோகேந்திரா, ஸ்ரீக்குமார் (VEEKAY CANDY LANDS, COLOMBO), சகதிக்குமார் (பிரான்ஸ்), ஜெயந்திக்குமார் (கனடா), சுரேஸ்குமார் (லண்டன்), ஜெயந்தினி (லண்டன்), சுகிர்தினி (லண்டன்), கேதீசன் (பிரான்ஸ்), கோனேஸ்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சத்தியசீலன், சுதாமதி, சசிகலா (கனடா), அமிர்தகலா (இந்தியா), தயாளன், ஜெயாளன் (கனடா), சுகந்தன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் பாபுஷன், ராஜுஷன், அம்ருதா (ஆஸ்திரேலியா), வைஷ்ணுசன், வினோஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பதிவுக்காரர் லேன்,
திருநெல்வேலி கிழக்கு.
(28847)(40-13-17-32)

தகவல்:-
திருமதி சி.நவரட்ணம்.
(மனைவி)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 04 1940

உதிர்வு 19 02 1999

அமரர்

கனகரட்ணம் முருகேசு

(ஸ்தாபகர், அம்பாள் பார்மஸி அன்ட் - குறோசறி, சாவகச்சேரி)

திதி: சதுர்த்தி

ஆண்டுகள் ஐந்து அகன்று போனாலும்
ஆறாதையா உங்களின் பிரிவுத்துயர் !
என்றும் உங்கள் நினைவுகளுடன்...!

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (சி-33432)(32-13-17)

- குடும்பத்தினர்.

மலையக மக்கள் முன்னணி மலையகத்தில் தனிவழியில்?

கொழும்பு,பெப்.24

மலையக மக்கள் முன்னணி, மலையகப் பிரதேசத்தில் இம்முறை தனித்துப் போட்டியிடும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

எனினும், கொழும்பில் அக்கட்சியின் வேட்பாளர் சிவகாந்தன் ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிடுவார் எனத் தெரிகின்றது.

மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் எம்.பியான வீ. இராதாகிருஸ்ணனுக்குத் தேசியப்பட்டியலில் இடம்ஒதுக்க ஐ.தேகட்சி இணங்கியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிடும் சிவகாந்தன், முன்னணியின் கொழும்புக்கிளை அலுவலகத்தில் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுபவர் எனக் கூறப்படுகின்றது.

நுவரேலியா மாவட்டத்தில் ஐ.தே.கட்சி பட்டியலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக மூன்று உறுப்பினர்கள் நிறுத்தப்பட்டிருப்பதால், மலையக மக்கள் முன்னணி அங்கு தனித்துப் போட்டிடுவது குறிதது ஆராய்ந்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

நுவரேலியா மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் இரண்டு வேட்பாளர்களை ஐ.தே.க. பட்டியலில் நிறுத்தும்படி மலையக மக்கள் முன்னணி வலியுறுத்தி வந்த போதிலும் அதற்குச் சாதகமான பதில் ஐ.தே.க. தரப்பில் இருந்து இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக மலையகத்தில் தனித்துப் போட்டியிடுவது பற்றிய தீவிர ஆலோசனையில் ம.ம. முனனணித் தலைமை நேற்றிரவு ஈடுபட்டிருந்தது.

சுதந்திரக் கூட்டமைப்பு கொழும்புப் பட்டியலில் ஒரேயொரு தமிழர்; இரண்டு முஸ்லிம்கள்!

முன்னாள் அமைச்சர் பௌஸியும் இடம்பெறுகிறார்

கொழும்பு,பெப்.24

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்புமனுப் பட்டியலில் ஒரேஒரு தமிழரும் இரண்டு முஸ்லிம்களும் இடம் பெற்றுள்ளனர். சர்ச்சைக்குரிய நிலையிலிருந்த முன்னாள் அமைச்சர் பௌஸியும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்தவின் தலைமையில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு கொழும்பு செயலகத்தில் தெரிவத்தாட்சி அதிகாரி ஜோசப் சில்வஸ்டரிடம் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சுசில் பிரேமஜயந்தவை முதன்மை வேட்பாளராகக் கொண்ட இப்பட்டியலில் ஏனைய வேட்பாளர்கள் வருமாறு:-

விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, சுனில் ஹன்துன்நெத்தி, லக்ஷ்மன் நிபுனுஆராசசி, பாரத லக்ஷ்மன பிரேமசந்திர, ஏ.எச்.எம்.பௌஸி, சந்தன கத்திரி ஆராச்சி, பேர்னாட்குரே, ஜீவன குமாரதுங்க, காமினி திலகசிறி, அமல சேனா லங்காதிகாரா, சோமவீர சந்திரசிறி, விஜயமுனி சொபிஸா, மேர்வின சில்வா, ரத்னகமகே, கீர்த்தி உடவத்த, ஹனிபா இஷாக், அர்ஜுன ரணதுங்க, பேர்ஸி விக்கிரமசேகர, நோபல் வேதநாயகம், நிரஞ்சன் நாணயகார, அல்பேதா மகேஸ்.

தேர்தல் கண்காணிப்புப் பணியை குடாநாட்டில் 'பவ்ரல்' ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,பெப்.24

எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டிய கண்காணிப்புப் பணிகளை 'பவ்ரல்' அமைப்பு குடாநாட்டில் நேற்று ஆரம்பித்தது.

அந்த அமைப்பின் பிரதிநிதிகளான கென்யாவைச் சேர்ந்த சாள்ஸ் ஒட்டுனியோ, பிரிமானுஸன் ஆகியோர் நேற்று இதற்காக யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ்.செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல்செய்யும் பணிகளை அவர்கள் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இவர்கள் இருவரும் தொடர்ந்து கண்காணிப்புப் பணியை மேற்கொள்வர்.

இந்த அமைப்பின் ஏற்பாட்டில் ஆயிரத்து 275 கண்காணிப்பாளர்கள் யாழ்.மாவட்டத்தில் ஏப்ரல் 2 ஆம் திகதி பணியாற்றுவர். (ஒ-3)

மயோன் முஸ்தபா விடுபட்டார்

திகாமடுள்ள முன்னாள் நியமன எம்.பி. மயோன் முஸ்தபாவை முஸ்லிம் காங்கிரஸ் கடைசி நேரத்தில் கைவிட்டுவிட்டது.

ஐ.தே.கவினரான மயோனை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினராக்கி முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் அவரைப் போட்டியிட வைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸே ஏற்பாடுகளைச் செய்தது. மயோனும் இணங்கினார். ஆனால், இறுதியில் அவரின் பெயரை தனது பட்டியலில் சேர்க்காமல் விட்டு விட்டது முஸ்லிம் காங்கிரஸ். எனினும் மயோனுக்கு ஐ.தே.க. தனது தேசியப்பட்டியலில இடமளிக்கிறது.

வாளால் அறுக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். உயிரிழந்தவரின் சடலம் நேற்று மாலை யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேற்று மாலை யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேரடியாகப் பார்வையிட்டார்.

அங்கு வெடிக்காத நிலையில் இருந்த மற்றொரு ஷெல்லையும், ஏற்கனவே அறுத்து உள்ளிருந்து வெடிமருந்து எடுக்கப்பட்ட 6 ஷெல்களும் காணப்பட்டன.

அத்துடன் ஷெல்களுக்குள் இருந்து எடுக்கப்பட்ட வெடிமருந்து சேமித்து வைக்கப்பட்டிருந்த பை ஒன்றும் அங்கு இருந்தது. அங்கு வெடிக்காத நிலையில் இருந்த ஷெல்லை நீதிவானின் உத்தரவின் பேரில் பின்னர் இராணுவத்தின் வெடிக்கச் செய்தனர்.

இந்த ஷெல்கள் கிடைத்த வழிவகைகள் குறித்து விசாரணை செய்யுமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வெடிக்காத நிலையில் காணப்படும் ஷெல்களை எடுத்து வந்து அவற்றை அறுத்து, உள்ளிருக்கும் வெடிமருந்தை எடுத்து விற்பதில் இப்பகுதியில் சிலர் ஈடுபட்டதாகக் கூறப்படுகிது. (ஒ-4-6-9-15-30)

தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்), வி.ஜீ.தங்கவேல் (தபால் மூல வள இயக்குநர்), பெரியதம்பி கனகசபாவதி (தலைவர், கூட்டுறவுச் சபை), சிறீஸ்கரன் பத்மினி (காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம், சாவகச்சேரி), வீரசிங்கம் குணசேகரம், நடராசா கனகரத்தினம்.

காத்தான்குடி பிரதேச செயலகம் உடைக்கப்பட்டுக் கொள்ளை

காத்தான்குடி,பெப்.24

காத்தான்குடி பிரதேச செயலக உதவிபிரதேச செயலாளரின் அலுவலகம் இனந்தெரியாத நபர்களினால உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஏ.ஏல்.எம்.பளீல் காத்தான்குடி பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

உதவிப் பிரதேச செயலாளரின் அலுவலகத்திலிருந்த கணனி, தொலை மடல் இயந்திரங்கள், தொலை பேசிகள், தட்டச்சு இயந்திரங்கள் உட்பட பல பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று பிரதேசசெயலாளர் தெரிவித்தார்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடி பொலீஸ் குற்றத் தடுப்புப்பிரிவுப் பொறுப்பதிகாரி டி.எம். அஜ்மீர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவதினம் இரவு நேரக் கடமையிலீடுபட்டிருந்த காவலாளி கடமையிலிருக்கவில்லை என்றும் பொறுப்பதிகாரி அஜ்மீர் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளவோ தடுத்தும், குளறியும் அவர்கள் கேட்கவில்லை. முதலில் எனது மகன் இரத்தவெள்ளத்தில் மயக்கமடைந்து விழுந்தார். நான் தடுத்த போதும் எனக்கு வெட்டினார்கள்.

அவ்வேளையில் எமது வள்ளத்தில் இருந்த எஸ்.சிவானந்தம் என்பவரை இழுத்து தமது வள்ளத்தின் வலைகளுக்கு மேல்போட்டு கழுத்திலும் வயிற்றிலும் வெட்டியதுடன், குறை உயிருடன் துடித்துக்கொண்டிருந்த அவரைத்தூக்கிக் கடலில் எறிந்தார்கள். நான் மயங்கிச் சரிந்துவிட்டேன் என்றார் அவர்.

இவர்களைக் காணவில்லை என இன்பருட்டி மீனவர்கள் தேடிச்சென்ற போது காயமுற்று மயங்கிய நிலையில் இரண்டு மீனவர்களுடன் சுமார் 18கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் அவர்களின் படகு கரைஒதுங்கியதை நேற்று மாலை 4 மணியளவில் கண்டு பிடித்தனர்.

படகையும் காயமுற்ற இரு மீனவர்களையும் ஏனைய மீனவர்கள் மீட்டு இன்பருட்டிக் கரைக்கு கொணடு வந்தசமயம் கரையில் இருந்த இராணுவத்தினர் முதலில் அவர்களைக் கரைக்கு வரவிடாமல் தடுத்ததாகவும் அதனால் அப்பகுதியில் சிறிய களேபரம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்திலும் விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற்றுறை அலுவலகததிலும் முறைப்பாடு செய்துள்ளார். இந்தச்சம்பவத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவரான செ.செல்வமோகனின் காயங்களுக்கு சுமார் 30 இழைகள் போட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9-70-173)

நில உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற்றுறைப் பொறுப பாளர் இளம்பரிதியும் மற்றும் முக்கியஸ்தர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வேட்பாளர்களை வரவேற்றனர். வேட்பாளர்களில் ஒருவரான ரெலோ ஸ்ரீகாந்தா அங்கு சமுகமளிக்கவில்லை. அவர், வெலிக்கடை விசேட நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஆறு தமிழ் இளைஞர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகச் சென்றுள்ளார். இதனால், நேற்றைய வேட்புமனுத் தாக்கலில் அவா கலந்துகொள்ளவில்லை என்று முன்னாள் எம்.பியான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

மாவீர் துயிலும் இல்லத்திலிருந்து வேட்பாளர்கள் யாழ்.முற்றவெளிக்குச் சென்று தந்தை செல்வா நினைவுத் தூபியடியில் கூடினர்; மலரஞ்சலி செலுத்தினர். அதன்பின்னரே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யச் செயலகத்துக்குச் சென்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, பலத்த இராணுவ - பொலீஸ் பாதுகாப்புடன் யாழ். செயலகத்துக்கு வந்தார். இவரின் வருகையை ஒட்டி யாழ்செயலக வளவுக்குள்ளும் வெளியிலும் பெரும எண்ணிக்கையான படையினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். மோட்டர் சைக்கிள்களில் படையினர் செயலகத்தைச் சுற்றி வட்டமிட்படி இருந்தனர்.

முன்னரே அங்கு வந்திருந்த கூட்டணிப் பிரமுகர்களான பெசூரியமூர்த்தி, ச.முத்துலிங்கம் ஆகியோர் ஆனந்தசங்கரியுடன் சேர்ந்து செயலகத்துக்குள் சென்று வேட்புமனுக்களைச் சமர்ப்பித்தனர்.

செயலகத்துக்கு வெளியே குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் ஆனந்தசங்கரி வேட்பு மனுத்தாக்கல செய்துவிட்டுச் சென்றதும் அங்கிருந்து அகன்றனர். பொலீஸார் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர் (ஒ-3-17-30-88-139)

தபால் மூல வாக்கு விண்ணப்பத் திகதி மார்ச் 1 வரை நீடிப்பு

கொழும்பு,பெப்.24

தபால்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத் திகதி மார்ச் மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்க வேண்டிய காலம் முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் நேற்றுடன் முடிவடையவிருந்தது. ஆயினும் மேலும் எக்காரணங்களைக் கொண்டும் இத்திகதி மீண்டும் நீடிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆறு கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரம் வருமாறு:-

தமிழ்க் கூட்டமைப்பு

மாவை சேனாதிராசா (முதன்மை வேட்பாளர்), என்.சிறிக்காந்தா, சி.வி.கே.சிவஞானம், திருமதி பத்மினிசிதம்பரநாதன், சுரேஸ்பிரேமச்சந்திரன், சி.சிவமகாராசா, ஜி.ஜி.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், சொலமன் சூ.சிறில், செ.கஜேந்திரன், என்ரவிராஜ், கி.சிவநேசன்.

சுயேச்சைக்குழு

சுயேச்சைக்குழுவில் போட்டியிடுவோர் விவரம் வருமாறு:-

வீ.ஆனந்தசங்கரி (முதன்மை வேட்பாளர்), ச.முத்துலிங்கம், ச.அரவிந்தன், செ.பத்மநாதன், ச.ஜோர்ச், கு.ராஜரத்தினம், சி.பொன்னுத்துரை, கி.நடராசா, பெ.சூரியமூர்த்தி, இ.சாந்தரூபன், இ.சங்கையா, செல்லன் கந்தையன்.

ஐக்கிய சோசலிசக் கட்சி

எஸ்.நகுலராஜ் (முதன்மை வேட்பாளர்), தேவசகாயம் அன்ரன், த.சுரேந்திரகுமார், அகுகதாஸ், திருமதி என்.ஏ. ஜெயராணி, எம்.மகாலும், எ.ஜே.ராஜ்குமார், கோவிந்தராசா, எஸ்.இராமநாதன், வி.கந்தையா, ஆர்.சபாரத்தினம், எஸ்.கே.பாலசுப்பிரமணியம்.

புதிய ஜனநாயகக் கட்சி

அ.குமாரசாமி, சு.மகேந்திரன், நா.விஜயன், ஆ.கந்தசாமி, வே.கமலராஜன், வ.கந்தையா, சி.விமலன், நா.பொன்னையா, கா.பத்மராசா, க.தயாளன், க.தில்லைநாதன், வே.அரசரத்தினம்.

சுயராஜ்சியம் கட்சி

ஆர்.குலசேர, கே.கம்பிகல, த.காசிநாதன், திருமதி ச.கவிதாதேவி, அ.முருகையா, திருமதி அ.புஸ்பகுமாரி, செல்வி அ.யசோதரா, அ.யசோதினி, ப.லட்சுமணன், திருமதி வி.ஜெயசுதா, கு.சிவகௌரி. (ஒ-3-86)

வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

1) ஒலிப்பதிவாளர்கள்
2) கணக்காளர்கள்
3) புகைப்படப் பிடிப்பாளர்
4) உதவியாளர்கள்

விண்ணப்பிப்போர் க.பொ.த. (உயர்தரம்) சித்தியுடன் கணனிசார் அறிவும் முன அனுபவமும உள்ளவராயிருப்பது விரும்பத் தக்கது.

மூர்த்தி வீடியோ அன்ட் எலக்ரோனிக்ஸ்
யாழ் வீதி – மானிப்பாய்
021-222-2884

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.